பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | மார்கழி 05 | 20 - 12 - 94 | செவ்வாய்க்கிழமை | ஓசை 305

## அடிப்படை சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டுகோள்

அண்மையில் பெய்த பருவ மழையைத் தொடர்ந்து தமிழீழத்தின் பலபகுதிகளிலும் நீரினால் பரவும் நோய்கள் குறிப்பாக நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம் என்பனவற்றுடன் மலேரியாவும் அதிகரித்துக் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவற்றின் தாக்கத்தில் இருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அடிப்படைச்சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். நீரினால் பரவும் நோய்களாகிய நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம் முதலியவற்றைக் கொதித்தாறிய நீரை மட்டுமே அருந்துவதன் மூலம் கட்டுப்படுத்த முடியும். எனவே ஆகக்குறைந்தது 20 நிமிடங்கள் கொதித்து, ஆறிய நீரையே அருந்தும்படியும், உணவு வகைகளை நன்கு சமைத்து உட்கொள்ளும்படியும் சகல மக்களையும் தமிழீழ சுகாதார சேவைகள் பகுதியினர் கேட்டுக்கொள்கின்றார்கள். குழாய்க் கிணற்றின் நீர், குளோரின் இடப்பட்ட நீர் என்பன கிருமிகள் (5-ம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தையில் இணக்கம் ஏற்படின் புத்தாண்டு முதல் போர்நிறுத்தம் அமுலாகும்!

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும், அரசாங்கத்தரப்புக் குழுவினருக்கும் இன்னும் சில தினங்களில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டால், புத்தாண்டு தினத்தில் இருந்து போர் நடவடிக்கைகள் இடைநிறுத்தம் அமுலாகும் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியவருகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை சிலதினங்களில் நடைபெறவுள்ளன இப் பேச்சுவார்த்தைகள் நாளைஅல்லது நாளை மறுதினம் இடம்பெறலம் என எதிர்பார்க்கப்படுகின்றது அநேகமாக நாளை மறுதினமே பேச்சுவார்த்தை நடைபெறலாம் என ஊகிக்கப்படினும், இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை உத்தியோகபூர்வமான அறிவிப்புக்கள் எவையும் வெளியாகவில்லை

இதேசமயம், இப் பேச்சுவார்த்தையில் முக்கிய அம்சமாக, போர் நடவடிக்கைகளை இடைநிறுத்துவது தொடர்பாக இரு தரப்பாரும் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் பற்றி விரிவாக ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது

இவ்விவகாரத்தில், இரு தரப்பினருக்கும் இடையில் உடன்பாடு காணப்படும் பட்சத்தில் புத்தாண்டு தினத்திலிருந்துபோர்நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இனப் பிரச்சினைக்கான தீர்வு நகல் திட்டம் அரசு தயாரிப்பு

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கான தீர்வு காண்பதற்கான நகல் திட்டமொன்றை தயாரிப்பதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக உயர்மட்ட அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளுடனான ஆரம்ப சட்டப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் அதே வேளையில், இத்தயாரிப்பு வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

மேற்படி நகல் திட்டம் தயாரிப்பதில் சகல அரசியற் கட்சிகளினதும் பிரேரணைகளும், ஆலோசனைகளும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு இறுதி நகல் திட்டம் தயாரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த வாரம் ஜனாதிபதியைச் சந்தித்த தமிழ்க் குழுக்கள் அப்போது இனப்பிரச்சினை பற்றிய விடயங்கள் பேசப்படவில்லை என்றும், பொதுவான பிரச்சினைகள் பற்றியும் தமிழ்க் குழுக்கள் அரசுக்கு வழங்கும் ஆதரவு பற்றியுமே ஆராயப்பட்டதாக தெரிவித்தன.

## பேச்சுவார்த்தை முடியும் வரை அரசதரப்பு 'யுத்தநிறுத்தம்' கோரும்?

[கொழும்பு]

இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகள் நிறைவு பெறும் வரை யுத்த நிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும்

... யிட்டுள்ளது.

இதனடிப்படையில் இராணுவ முன்னணி எல்லைகளுக்கு முன்பாக இராணுவ சூனியப் பிரதேசமொன்று உருவாக்கப்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படும். ஆனால் இராணுவ சூனியப் பிரதேசத்

... புதிய பிரதேசங்களை கைப்பற்றும் நடவடிக்கையில் இறங்கக் கூடாது எனவும் கேட்டுக் கொள்ளப்படக் கூடுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சங்குப்பிட்டிப் பாதையை அல்லது ஆனை

## கடற்கரும்புலிகள் உருவப்படங்கள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

மகளிர் கடற் கரும்புலிகள் லெப். கேணல் நளாயினி, மேஜர் மங்கை, கப்டன் அங்கயற்கண்ணி ஆகியோரது

## இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை 22-ம் திகதி நடைபெறலாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கென அரசதரப்பு பிரதிநிதிகள் அடங்கிய குழு நாளை மறுதினம் யாழ்ப்பாணம் செல்லவுள்ளனர் என பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

இதுகுறித்து பி பி ஸியின் செய்தியாளர் எல்மோ-பர்னான்டோதெரிவிக்கையில் யாழ்- செல்லவுள்ள பிரதிநிதிகள் குறித்தும், பேச்சுவார்த்தையில் அரசதரப்பு பிரதிநிதிகள் பேசவேண்டிய விடயங்கள் குறித்தும் பலமணி நேரம் ஆராயப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மேலும் செய்தி வெளியாகும்வரை இதுகுறித்த முடிவுகள் எதுவும் வெளியாகவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கென அரசதரப்பு பிரதிநிதிகள் அடங்கிய குழு 21-ம் 22-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் செல்லும் என ஏற்கனவே செய்திகள் வெளியானது தெரிந்ததே.

வரை யுத்த நிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என நாளை புதனன்று யாழ். வரும் பிரதிநிதிகள் அடுத்த கட்டப் பேச்சுக்களில் கேட்க விருப்பதாக கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளி

டுக்கொள்ளப்படும். ஆனால் இராணுவ சூனியப் பிரதேசத்தில் இராணுவம் காவலரண்களை அமைக்குமெனவும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடும் எனவும்,

அதேவேளையில் புலிகள்

இதேவேளை சங்குப்பிட்டிப் பாதையை அல்லது ஆனையிறவுப் பாதையைத் திறப்பது பற்றியும் அரசுக்குழு பரிசீலனை செய்யுமெனவும், எனினும் அரசாங்க தரப்புக்

[6ஆம் பக்கம் பார்க்க]

மேஜர் மங்கை, கப்டன் அங்கயற்கண்ணி ஆகியோரது நினைவுருவப் படங்கள் யாழ் புதிய பேருந்து நிலையத்தில் இன்று மாலை ஐந்து மணிக்கு திரைநீக்கம் செய்துவைக்கப்படவுள்ளன.

# 16 படைப் பிரிவுகளுடன் புலிகளிடம் விமானப்படையும் உருவாகிவிட்டது

### சண்டேரைம்ஸ் இராணுவ ஆய்வாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள்தங்கள் படையணிகளுடன் எல்லாமாக 16 கட்டுப்பாட்டுப் பிரிவுகளை அமைத்துள்ளனர். தற்போது அவற்றுடன் ஆகாயப் பிரிவையும் (Air Tigers) அமைத்துள்ளனர் என சண்டேரைம்சின் இராணுவ ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த ஆகாயப் புலிகள் பிரிவிலும் தமது கூர்மையான யுத்த தந்திரோபாயங்களையும் புலிகள் வகுத்துள்ளனர். அவற்றுள் முதலாவதாக, 1992 - 1994 ஆண்டுகளுக்கிடையே ஐரோப்பிய நாடொன்றில் இலகு விமானங்களை கொள்வனவு செய்து, கப்பல் மூலம் தமிழ் நாடு ஊடாக யாழ்ப்பாணம் கொண்டுவந்துள்ளனர்.

இதில் இரண்டாவதாக தமது 20 போராளிகளை 1992இல் ஐரோப்பிய நாட்டுக்கனுப்பி, மைக்ரோலண்ட், கிளைடர் ஆகியவற்றில் பயிற்சியளித்துள்ளனர்.

மூன்றாவதாக, தமது இராணுவ தலைமையக பிரிவுகளிலிருந்து சிறந்த வீரர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அதிவிசேட பயிற்சிகள் கொடுத்து சிறிலங்கா விமானப் படை விமானங்கள் தரித்திருக்கும் வேளையில் புகுந்து அழிப்பதற்கும், ஊடுருவல் செய்து அழிப்பதற்கும் பிரிவொன்றை அமைத்துள்ளனர்.

மேலும் தமது ஆகாயப் புலிகள் படைப் பிரிவுக்காக வடக்கில் எழுதுமட்டுவாள், கிளிநொச்சி ஆகிய இடங்களில் விமானப்படைத் தளங்களையும் அமைத்துள்ளனர்.

இதற்கான சகல பொறுப்புக்களையும் புலிகளின் மூத்த தளபதியான சொர்ணம் கவனித்து வருகின்றார்.

புலிகள் முதன் முதலாக தளபதி கிட்டுவின் தலைமையில் விமானமொன்றை அமைத்தார்கள் ஆனால் அது பாரம் கூடிய காரணத்தால் பறக்கமுடியாமல் போயிற்று எனவும் அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

## மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்வு பெற்றோர்

[கொழும்பு]

அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் பதவியுயர்வு வழங்கப்பட்ட இராணுவ அதிகாரிகளின் பெயர் விபரம் வெளியாகியுள்ளது. மேஜர் ஜெனரல்களாக பதவியுயர்வு பெற்றவர்களில் தமிழர் ஒருவரும் அடங்குகின்றார்.

மேஜர் ஜெனரல்களாக பதவியுயர்த்தப்பட்டுள்ள 9 பிரிகேடியர்களின் விபரம் வருமாறு: பிரிகேடியர் சிவ சண்முகம். பிரிகேடியர் கெமுனுகுலதுங்க, பிரிகேடியர் எஸ். எஸ். ஹப்புஆராய்ச்சி, பிரிகேடியர் சி. எஸ். விஜயசூரிய, பிரிகேடியர் ஜே. நம்முனி, பிரிகேடியர் ஜெயவர்த்

[6ஆம் பக்கம் பார்க்க]

## ஜனகபுரவில் புலிகள் தாக்குதல்; மூன்று இராணுவத்தினர் பலி

மணலாறு ஜனகபுர இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள்நடத்திய தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்

கடந்த நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குள் இத்தாக்குதல் நடைபெற்றதாக குறிப்பிட்ட இவர், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் தொடர்வதாகவும் குறிப்பிட்டார்

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

# அரசாங்க தூதுக்குழுவிற்கு புதியவர் தலைமை தாங்குவார்?

### நவீன் குணரட்ண தகவல்

(கொழும்பு)

புலிகள்-அரசு முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் அரச தரப்புக் குழுவிற்குத் தலைமை தாங்கிய பலபத்தபெண்டி இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் கலந்துகொள்வதில் சந்தேகம் நிலவுவதாக அரசாங்க தரப்பு பிரதிநிதிகளில் ஒருவரான நவீன் குணரட்ண தெரிவித்துள்ளார் இவர்கடும் சுகவீனத்தால் மருத்துவ சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்திய ஆலோசனைப்படி பேச்சுக்களில் கலந்துகொள்ளமுடியாத நிலையில் அவர் உள்ளார் எனவும் நவீன்குணரட்ண மேலும் கூறினார்

பி.பி.ஸின் சிங்கள சேவைக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் கூறுகையில் இப் பேச்சுவார்த்தையில் இராணுவ அதிகாரி ஒருவர் கலந்துகொள்ள இருப்பதாக தமக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் நீண்ட காலம் வன்னி

[6ஆம் பக்கம் பார்க்க[

## சிறிமாவின் வீட்டில் குவிந்த செய்தியாளர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்தவுள்ள பேச்சுவார்த்தைகள் குறித்த விபரமறியவென நேற்று பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் றோஸ்மிட்பிளேஸ் இல்லத்தில் பெரும் எண்ணிக்கையான உள்நாட்டு வெளிநாட்டுச் செய்தியாளர் கூடினர்.

பிரதமர் சிறிமாவோ வீட்டிலேயே அரச தரப்பு பிரதிநிதிகள் கூடி இது தொடர்பாக விவாதித்ததைத் தொட

[6ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். வரும் தூதுக்குழுவில் பிரிகேடியர் கல்பகேக்கு இடம்

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுடனான இரண்டாம் கட்டப் பேச்சுகளின்போது அரச தரப்பு குழுவில் பிரிகேடியர் கல்பகே என்பவரும் இடம்பெறலாம் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன,

இராணுவ அதிகாரியான கல்பகேயின் பெயர் அரச தரப்பு குழுவில் இடம்பெற சிபார்சு செய்யப்பட்டுள்ளதாக முன்னதாக வெளியான செய்திகள் தெரிவித்தன,

பேச்சுக்களின்போது இராணுவ தரப்பு சம்பந்தமாக போர் நிறுத்தம், பாதை திறப்பு போன்ற விடயங்கள் ஆராயப்படுகையில் அரச தரப்பில் இராணுவ அதிகாரி ஒருவர் இருப்பதை அரசு விரும்புவதாக கூறப்படுகின்றது.

இதேவேளை அரசு-புலிகள் பேச்சுவார்த்தைகள் ஜனவரி மாதமளவில் உச்சிமாநாடாக நடக்கலாம் எனவும் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

## யாழ் வர லயனலுக்கு ஆர்வம் இல்லையாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநராக லயனல்பெர்னாண்டோ பதவி வகித்தவேளையில் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கட்டட நிர்மாணம், தளபாட கொள்வனவு என்பவற்றில் ஊழல் நடைபெற்றதாக கூறப்படும் குற்றச்சாட்டை அடுத்து அவர் புலிகளுடனான இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் கலந்துகொள்ள மனமில்லாமல் இருக்கிறார் என சண்டே ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண

[6ஆம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

C S A

**கணனி வகுப்புக்கள்**

7 மாத Data Processing & BAsIC programming. ஆரம்பம் 28-12-94 காலை 8.30 மணி. பல்கலைக்கழகம் புக இருப்பவர்களுக்கு ஏற்றது. Computer Science Academy Navalady Lane, Thirunelvely. (சி-10923)

**நீமியா உரம்**

பயிர்களுக்கு ஊட்டம்தரும் உணவாக பயிர்களின் பூச்சிகளிலிருந்து பாதுகாத்தும், சிறந்த அடிக்கட்டு பசளையாகவும் உதவுவது. 1 கிலோ, 20 கிலோ பைக்கற்றுகளில் கிடைக்கிறது. மில்க்வைற். (சி-10943)

**தவறிவிட்டது**

17-12-94அன்று அ செல்வரெத்தினம் (நாவற்குழி) என்பவருடைய அடையாள அட்டை (இல. 303171223) கோண்டாவில், திருநெல்வேலி, நாவற்குழிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (10445)

**தவறிவிட்டது**

தேசிய அடையாள அட்டை இலக்கம் 450692247 V 14-12-94-ல் நல்லூருக்கும், யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து க. கனகரட்னம், 14, இராச வீதி, நல்லூரில் ஒப்படைக்கவும். (10444)

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கும் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் அணித்தாய் 31 கதீட்ரல் வீதியில் அமைந்துள்ள ¾ பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 31, கதீட்ரல் வீதி. (பிலிப்ஸ் டிஸ்பென்சரிக்கு முன்னால்) யாழ்ப்பாணம். (10447)

**தவறிவிட்டது**

19-12-1994-ல் யாழ்ப்பாணம் வர்த்தக வங்கிக்கும்-சுழிபுரம் சந்திக்கும் இடையில் பஸ்சில் பிரயாணம் செய்யும் பொழுது ஒரு தொகைப் பணம் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் யாழ். சுவையருவி அல்லது ஸ்கைலக், சுழிபுரம் என்னும் முகவரியில் கையளிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும், (10450)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

**பட்டப்பின் டிப்ளோமா ஆங்கிலம்/ டிப்ளோமா ஆங்கிலம் பரீட்சைகள் 1994**

மேற்படி பரீட்சைக்குத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களைப் பரீட்சைக் கிளையில் பெற்று பூர்த்தி செய்து ஒரு பாடத்திற்கு 50/- ரூபா வீதம் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் செலுத்தி பற்றுச்சீட்டுடன் விண்ணப்பங்களை டிசம்பர் 27-ம் திகதிக்கு முன்னதாகப் பரீட்சைக் கிளையில் சமர்ப்பிக்கவும். பரீட்சைகள் ஜனவரி 2-ம் திகதி தொடக்கம் ஜனவரி 10-ம் திகதிவரை நடைபெறும். பரீட்சை அனுமதி அட்டைகளை 28-ம் திகதி பரீட்சைக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.

(சி-10944)


## ஆண் வயிற்றில் கரு

எம்பிலிப்பிட்டியவில் இளைஞர் ஒருவரின் வயிற்றில் கரு ஒன்று வளர்வதை டாக்டர்கள் கண்டறிந்து ஆச்சரியம் தெரிவித்துள்ளனர். ஆண் கருத்தரித்துள்ள விடயம் அபூர்வமாக இருப்பதாக டாக்டர்கள் கூறினர்.


## 9-ம் ஆண்டு நினைவலைகள்



மடியில் மகனாக

05-07-1964

மண்ணில் மாவீரனாக

20-12-1985

**வீரவேங்கை கார்த்திக்**
**(இராசப்பு உதயகுமார்)**

மழலையாய் மடியில் தவழ்ந்து திரிந்தாய்
சிறுவனாய் வளர்ந்து சிரித்து நின்றாய்
இளைஞனாய் இன்முகம் காட்டிய வேளை
சுதந்திரம் தேடி சுறுக்காய் விரைந்தாய்
துயரம் சுமந்து துன்பத்தில் ஆழ்ந்தோம்
ஆண்டுகள் ஒன்பது உருண்டுதான் சென்றன
ஆயினும் உன்நினைவு அகலவில்லை
என்றும் எதிலும் எம்முடன் உம் நினைவு.

பாசமுடன்

உதயகுமார் வீதி, கோண்டாவில் மேற்கு. (10451)

அப்பா, அம்மா, சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிகள், உறவினர், நண்பர்கள்.

## பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

# பதவி வெற்றிடம்

மேற்படி எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்காண் பதவி வெற்றிடத்துக்கு தகைமை உள்ளோரிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**பதவி: கணக்காளர் - 104:7**

சம்பள அளவுத்திட்டம்:- 1165 - 60×3 - 75×11 - 2170

[இதர படிகளும் வழங்கப்படும்]

தகைமைகள்;- அ] கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்காய்வாளர் பதவியிலான 2 வருடத்துக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்கு சம்பந்தமான பதவியில் 4 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தில் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத் துறையிலான 4 வருடத்துக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் [உயர்தரம்] / க. பொ. த. [உயர் தரத்தில்] கணக்கியல் உள்ளடங்கிய 3 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.



## 31-ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்

21-04-1921

ஆண்டவன்மடியில்

20 11-1994



## நினைவு கூருகின்றோம்...

**20.12.1994**

1985-ம் ஆண்டு இதேதினத்தில் யாழ்-அரியாலைப் பகுதியில் எமது முகாம் ஒன்றினை சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்தபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**கார்த்திக்** [தம்பு இராசப்பு - உதயகுமார் - கோண்டாவில் மேற்கு - யாழ்]

1986-ம் ஆண்டு ஊர்காவற்துறை, வேலணைப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**வல்லி** [பொன்னுத்துரை சாந்தகுமார்-குமரக்கோட்டம், கோண்டாவில்-யாழ்]

1987-ம் ஆண்டு அச்செழுப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சகிலா** [றஜனி நவரட்ணம் - பெற்றாவீதி-மன்னார்]

ஊரெழுப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய,

**பவான்** [கறுப்பையா தயாபரன்-பெரியமடு-மன்னார்]

**கப்டன் பாரதிமாஸ்ரர்** [கனகலிங்கம் ரவீந்திரன்-170, கஸ்தூரியார்வீதி-யாழ்]

**தாஸ்** [சின்னராசா சதீஸ்வரன் - அளவாவோடை, ஏழாலை மேற்கு-யாழ்]

**லோகேந்திரன்** [ஐயாத்துரை லோகேந்திரன்-அச்செழு-யாழ்]

**ரவி** [சுப்பிரமணியம் தவேந்திரன்-ஏழாலை மேற்கு-யாழ்]

**சந்திரன்** [துரைராஜா சண்முகரத்தினம் - அம்மன் வீதி, பண்டத்தரிப்பு-யாழ்]

**குண்டுத்தம்பி** [மகாலிங்கம் நாகேஸ்வரன் - 7-ம் சட்டை, மல்லாகம் தெற்கு-யாழ்]

**ஆனந்தன்** [உலகநாதன் முரளி - 639, கடற்கரை வீதி-யாழ்]

**சந்திரன்** [செபஸ்ரின் தேவகுரு-நெடுந்தீவு]

**ஜோன்சன்** [- - -]

**மாவி** [கந்தசாமி யோகேஸ்வரன்-இன்பம்வீதி, வண்ணார்பண்ணை-யாழ்]

1988-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளால் கைதுசெய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட,

**கேசியன்-குமார்** [குணரட்ணம் ஜெயக்குமார் - மீனாட்சி வீதி, கொட்டடி-யாழ்]

1991-ம் ஆண்டு திருமலை மூதூரில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட எறிகணை வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**கப்டன் கிர்மானி-கதிர்வேலன்** [ந. துரைராசா சிவராஜ்குமார்-லிங்கநகர்-திருமலை]

**லெப். கைலன்-கனியன்** [சண்முகம் சித்திவிநாயகம் - மூதூர்-திருமலை]

**ரகு** [குமரன் சுரேஸ்-முகத்துவாரம் கொழும்பு-15]

1992-ம் ஆண்டு மன்னார்- நானாட்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தொடர் காவலரண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். தங்கன்** [அழகையா ஐயாத்துரை-மகிளூர்முனை, ஒந்தாச்சிமடம்-மட்டு]

**மேஜர் ஆசீர்** [கணேசபிள்ளை ராஜகுலசிங்கம்-கல்லூரி வீதி-திருமலை]

**2-ம் லெப். சிறிகாந்தன்** [அந்தோனிமுத்து வரதராசன் -பெரிகுஞ்சுக்குளம் - வவுனியா]

**கப்டன் வாசுதேவன்-ஜோய்** [ஐயப்பெருமாள் செல்வகுமார் - ஸ்ரேசன் வீதி-மன்னார்)

**லெப். சச்சி** [அன்ரனி சிறீகாந்-தலைமன்னார் பியர்-

வழும்.

வயதெல்லை;- 21 க்கும் - 40 க்கும் உட்பட்டவர்கள்

**பதவி:- கல்வி உத்தியோகத்தர் 201:8**

சம்பள அளவுத்திட்டம்:- 1085 - 40×3 - 50 × 10 - 1705

(இதர படிகளும் வழங்கப்படும்)

தகைமைகள் :- (அ) கூட்டுறவுப் பணியாளர் 11-வது சம்பளத்திட்டம் 2 வருடத்துக்கு குறையாத அனுபவமும், 12-வது சம்பளத்திட்டத்தில் 4 வருடங் களுககுக் குறையாத அனுபவமும் அங்கத்தவர் தொடர்புப் பயிற்சிப் பதவியில் பெற்றிருக்கவேண்டும்.

அல்லது,

(ஆ) கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம்(உயர்தரம்) |க-பொ-த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி

வயதெல்லை;- 21 க்கும் - 40 க்கும் உட்பட்டவர்கள்

குறிப்பு:- கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு எப்பதவிக்கும், வயதெல்லையில் விலக் களிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் சங்கத்துக்கூடாக அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரித்து 31-12-94- அன்று அல்லது அதற்கு முன்பாக பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ. சங்கம் பிரதானவீதி, மானிப்பாய் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலிலோ நேரிலோ அனுப்பி வைக்கலாம்.

பிரதான வீதி,
மானிப்பாய்.

-பொது முகாமையாளர்

(சி-10947)



## தம்பிப்பிள்ளை ஞானநாதன்

(ஓய்வுபெற்ற அரசாங்க லிகிதர்)

ஐயா நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்களைப்போல் எமக்கு யாருமில்லை. உங்கள் அறிவுரையும், அன்பும் என்றென்றும் எம்மை வழிநடத்தும் ஐயா.

உங்கள் செல்வங்கள் வெவ்வேறு இடங்களில் பிரிந்திருப்பினும் உங்கள் நினைவுகளால் ஒன்றுபட்டு கலங்குகின்றோம் ஐயா

ஆனாலும் எம் நினைவுகளிலிருந்து எமக்கு வழி காட்டும் தந்தையே, உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:.
சிறிசந்திரசேகரப் பிள்ளையார் கோவிலடி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(10446)

செல்வகுமார் - ஸ்ரேசன் வீதி-மன்னார்)

**லெப்.சச்சி** [அன்ரனி சிறீகாந்-தலைமன்னார் பியர்-மன்னார்]

**லெப். தமிழவன்** [ஈசாத் சுதா - நறுவிலிக்குளம், வங்காலை- மன்னார்]

**இசையமுதன்** (இராசையா மோகனகுமார்-சிவபுரம் கிரான்சி - மன்னார்)

மட்டு- தம்பன்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**செந்தூரராஜ்-ரகீம்** (மயில்வாகனம் கோணேசமூர்த்தி- பெரிய கல்லாறு- மட்டு)

**அம்சன்** (சண்முகம் நடேஸ்வரன் - கோயில் போரதீவு -மட்டு)

இதேதினம் தமிழீழஎல்லைக்குட்பட்டபிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும் இந்தியப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்,

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

[இ-10942]


## முந்துங்கள்!

**வானவில்லின் நத்தார் புதுவருட விசேட சலுகை!!**
**பண்டிகைக் கால "ஒன்று கூடல்" உணவுகளில்**

★ வான்கோழி ★ கோழி
★ புரியாணி ★ சூப்

மற்றும்

★ பலவித ஐஸ்கிறீம்
★ புடிங் வகைகளுடன்

உடன் பரிமாற்றக்கூடிய தயாரிப்புக்கள்

இவற்றுடன்

★ கிறிஸ்மஸ் கேக்
★ இனிப்பு - சிற்றுண்டிவகைகள்

**வானவில்** உங்களுக்காக காத்திருக்கின்றன

(சி-10948)

உங்கள் தேவைகளை முன்கூட்டியே பதிவு செய்து ஏமாற்றத்தை தவிர்த்துக்கொள்ளுங்கள்

**கவனிப்பு**

**சலுகைக் காலம்:- 20-12-1994 - 05-01-1995**

தொடர்புகளுக்கு:-

# வானவில்

**ஆரியகுளம் சந்தி,**
**யாழ்ப்பாணம்.**

**தரமான தயாரிப்புகளுக்கு நாடுங்கள் வானவில்**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.



# மலேரியா நோயாளிகளால் பளை ஆஸ்பத்திரி நிரம்பல்

(தென்மராட்சி)

மலேரியா காய்ச்சலினால் நோயாளர்கள் தென்மராட்சிப் பகுதியில் பாதிக்கப்பட்டுள்ளனர். சாவகச்சேரி பகுதியை விட பச்சிலைப்பள்ளி பகுதியில் இம்மாதம் மிகவும் கூடுதலானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மலேரியா நோயாளர்கள் பளை மருத்துவ மனையில் நிரம்பிவழிகின்றனர். மரத்தின் நிழலிலும் விறாந்தைகளிலும் இவர்கள் தங்குகின்றனர். மாசார், இயக்கச்சி, கிளாலி போன்ற இடத்திலேயே கூடுதலாக மலேரியா காணப்படுகிறது.

இதேவேளை மூளைமலேரியாவும் கூடியுள்ளது என மருத்துவமனை வட்டாரம் தெரிவிக்கிறது (86)

# கிளிநொச்சி மாவட்டத்திற்கு புதிய அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனவரியில் கிளிநொச்சிக்கு புதிய அரச அதிபர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாக நம்பகரமாகஅறிய வந்துள்ளது.

தற்சமயம் கிளிநொச்சி அரச அதிபராக யாழ். அரச அதிபர் திரு. பொன்னம்பலமே தொடர்ந்து கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வவுனியா அரச அதிபர் திரு. தில்லை நடராஜா கிளிநொச்சி அரச அதிபராகவும், மன்னார் அரச அதிபர் திரு. கணேஷ் வவுனியா அரச அதிபராகவும் நியமனம் பெறக்கூடும் எனச்செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. (பா, தி)

# கிழக்குபல்கலை. பீடங்கள் முக்கிய நகரங்களுக்கு?

[மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் நான்கு பீடங்களையும் கிழக்கு மாகாணத்தின் முக்கிய நகரங்களில் அமைக்குமாறு கல்வியமைச்சுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, வந்தாறுமூலை, கல்முனை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பீடங்களை அமைக்கலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

இதன்படி, கடல்சார்ந்த பொறியியல் உட்பட்ட பொறியியல் பீடம் திருகோணமலை சீனன் குடாவிலும்-விவசாய, மிருக வளர்ப்பு வந்தாறுமூலையிலும் கலை, கலாசார, வர்த்தக, முகாமைத்துவ பீடம் கல்முனையிலும்-வைத்திய, விஞ்ஞான பீடத்தினை மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள்ளும் அமைக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# 6-ம் ஆண்டில்

## ஈ ழ நா த ம்

## போட்டிகளும் விதிமுறைகளும்

ஈழநாதம் மக்கள் தினசரி ஆறாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதைமுன்னிட்டு சிறுகதைப் போட்டி

# வடமராட்சி பிரச்சினைகள்; அரச அதிபர் – அதிகாரிகள் சந்திப்பு

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் உள்ள அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், மீனவர் சங்கங்கள் என்பவற்றில் இருந்து வருகின்ற நடைமுறைச் சிக்கல்கள் பாதிப்புக்களை தனியாகவும் கூட்டாகவும் ஆலோசித்து தீர்த்து வைக்க யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் கொள்கையளவில் இணக்கம் கண்டுள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி தலைமையில் கடந்த சனி மாலை 4 15 மணியளவில் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள், நிறுவனங்கள், மீனவர் சங்கங்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளுடன் அரச அதிபர் ஏற்படுத்திய சந்திப்பு ஒன்றுகூடலின் போது பல விடயங்கள் ஆராயப்பட்டன.

° பருத்தித்துறை இறங்குதுறைக்கு இரண்டு இழுவைப் படகுகள் எடுத்து வரப்படவுள்ளதாகவும், மற்றும் இத்துறைமுகத்தில் உள்ள பழுதடைந்த இழுவைப்படகுகள் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

° 1993-ம் ஆண்டு பன்முக வரவு செலவுத் திட்டத்தின் மிகுதியான நிதியைப் பயன்படுத்தி பருத்தித்துறை கரையோரப்பகுதி சேதமடைந்த குறித்த அணைக்கட்டு கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு இரண்டரை லட்சம் ரூபா செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

° போதிய இடவசதி இல்லாமல் செயற்படும் பருத்தித்துறை பிரதேச செயலர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தவும், அதற்கான வாடகையை வழங்க அரச அதிபர் தீர்மானித்தார்.

° இராணுவ நடவடிக்கையினால் சேதமடைந்த விபரங்கள் மதிப்பீடு செய்யப்படவுள்ளதாகவும் அதற்கான படிவங்கள் பூர்த்தி செய்து கிராம அலுவலர் ஊடாக சேகரிக்கப்படும் என்றும் அது பற்றிய விபரம் பத்திரிகை மூலம் வெளிவருமென்றும் தெரிவிக்கப்பட்டது.

° சீமெந்து விநியோகம் பழையபடி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

° தற்போது வழங்கப்படாதிருக்கும் மீனவர்களுக்கான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் வழங்கலும் கவனிக்கப்படும்.

° போக்குவரத்து கட்டண உயர்வு பற்றியும் கரவெட்டி பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீனிவாசன் தெரிவித்தார்.

° பலநோக்கு கூட்டுறவுச் சங்கபிரதிநிதிகள் இப்பகுதிக்கான உணவுப்பொருள்களை வடமராட்சியில் களஞ்சியப்படுத்த வேண்டும் என்றும் அல்லது கொழும்பில் இருந்து கூட்டுறவுச் சங்கங்கள் நேரடியாக பொருள்களை கொண்டு வர கப்பல் ஒழுங்கு செய்யப்பட வேண்டும் எனவும் கோரினர்.

மேலும் பல கோரிக்கைகள் அரச அதிபருக்கு மகஜர் மூலம் வழங்கப்பட்டன.

பிரதேச செயலர் அலுவலகத்தில் நடைபெற்ற ஒன்றுகூடல் சந்திப்பின் போது அரச அதிபருடன் திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன், உதவித் திட்டப்பணிப்பாளர் திரு. மாசிலாமணி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகங்களைச் சேர்ந்த திணைக்கள, கூட்டுறவு, தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களுக்கான இச்சந்திப்பு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதேபோன்று மருதங்கேணி பிரதேச செயலகத்திலும் இவ்வாறான சந்திப்பு இடம்பெற்றது. (யோ)

### அதிக மாணவர் தோற்றும்

# பாடசாலைகளுக்கு அ. அட்டை இன்னமும் கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலக ஆட்பதிவு திணைக்களத்திடம் பரீட்சை எழுதும் மாணவர்கள் தம் பாடசாலைகள் ஊடாக சமர்ப்பித்த அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் தாமதமாகவே கொழும்பு ஆட்பதிவு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதாக வெளியான செய்தி தொடர்பாக யாழ் செயலக ஆட்பதிவு திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் விளக்கம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இதில்அடையாளஅட்டைக்கு விண்ணப்பித்த பாடசாலைகளுக்கு தமது திணைக்களம் அடையாள அட்டை வழங்கிய பாடசாலைகளேயாகும்.

அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் 1 7 94இல் ஒப்படைத்த விண்ணப்பங்கள் 22.8 94 இல் கொழும்பிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

அச்சுவேலி மகாவித்தியாலயம் 16.6 94 இல் விண்ணப்பங்களை ஒப்படைத்ததாகவும் 15.6 94 இல் அவை கொழும்பிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தவகையில் நூற்றுக்கணக்கான பாடசாலைகள் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தும் 30 பாடசாலைகளுக்கே இதுவரை அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதுடன் அதிக மாணவர் தோற்றும் பிரபல பாடசாலைகள் பல விண்ணப்பித்ததற்கு அமைய இன்னமும் அடையாள அட்டையை பெறமுடியாத நிலையில் உள்ளன.

இப்பாடசாலைகளின் விண்ணப்பங்களை செயலக ஆட்பதிவு திணைக்களம் அனுப்பி வைக்க தாமதித்ததினால் அவை இன்னமும் அடையாள அட்டைகளை பெற முடியவில்லை என பாடசாலை வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

### சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு

### பௌத்தம் தொடர்பான நூலில்

# பாப்பரசரின் கருத்துகள் மீளப் பெற வேண்டும்

-பேராசிரியர் நளின் டி சில்வா

(கொழும்பு)

பாப்பரசர் எழுதியுள்ள நூலில் உண்மைக்குப் புறம்பான விபரங்கள் இருக்கின்றன. எனவே அவர் இலங்கைக்கு வரும் முன்பாக அக்கருத்துக்கள் மீளப் பெறப்பட வேண்டும். இவ்வாறு 'ஜாதிக சிந்தனய' என்ற அமைப்பின் தலைவரான பேராசிரியர் நளின் டி சில்வா கோரியுள்ளார். பௌத்த அமைப்புக்களின் சம்மேளனம் சார்பாகப் பேசிய அவர் மேலும் கூறுகையில்,

இந்த எதிர்ப்பு பற்றி பாப்பரசருக்கு உடனடியாகவே 'சுவர்ணஹங்க' என்ற அமைப்பின் மூலம் தகவல் அனுப்பப்பட்டு உள்ளது. அதற்கு எந்தப் பதிலும் கிடைக்காது விட்டால் பௌத்த சாசன அமைச்சுக்கும், ஜனாதிபதிக்கும் மஹா நாயக்க தேரர்களுக்கும் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# ஆட்கடத்தல் வழக்கில் ஹமில்டன் மீது விசாரணை

சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா கடந்த 15ஆம் திகதியன்று உயர் நீதிமன்றத்தில் அதன் உத்தரவுப்படி ஆஜரானார். ஆட்கடத்தல் மற்றும் காணாமற்போனவர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீதான வழக்கு ஒன்றிலேயே இவர் ஆஜர் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதுதொடர்பான அறிக்கை பெப். 16ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவேண்டும் எனவும் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

# அமைச்சர் மகன் மீது வழக்கு தாக்கல்

(கொழும்பு)

அனுமதிப்பத்திர மற்ற நவீனரக ரைபிள்கள், இரு சாதாரண துப்பாக்கிகள், துப்பாக்கி ரவைகள், கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வைத்திருந்தது தொடர்பாக முன்னாள் அமைச்சர் விஜேபால மெண்டிஸின் மகனுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# சொத்தி உபாலி பிணையில் விடுதலை

சொத்தி உபாலி உட்பட ஒன்பது பேருக்கும் தலா பதினையாயிரம் ரூபா பிணையில் செல்ல மாத்தளை மாவட்ட நீதிவான் அனுமதி வழங்கியுள்ளார்.

மாத்தளை மாநகர சபை உறுப்பினர் ரஸ்மார் உசைன் கொலை தொடர்பாக சொத்தி உபாலி உட்பட இந்த ஒன்பது பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

இந்த வழக்கு கடந்த வியாழனன்று மாத்தளை மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது சந்தேக நபர்களான சொத்தி உபாலி எனப்படும் ஏ டி உபாலி ரஞ்சித், தட்ட சோமே எனப்படும் கே. ஏ சோமபால, சரத் குணவர்த்தனா உட்பட ஒன்பது பேரும் நீதிமன்றத்தில் இரகசியப் பொலிசாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

அப்போது அவர்களை பிணையில் அனுமதித்த நீதிவான் ஒவ்வொரு மாதத்திலும், முதலாம், மூன்றாம் சனிக்கிழமைகளில் குற்றப் புலனாய்வு தலைமையகத்தில் ஆஜராக வேண்டும் எனவும் நிபந்தனை விதித்தார். இவ்வழக்கு எதிர்வரும் பெப்ரவரி 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

95

ஈழநாதம் மக்கள் தினசரி ஆறாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதைமுன்னிட்டு சிறுகதைப் போட்டி கவிதைப் போட்டி என்பவற்றை நடாத்தவுள்ளது. இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளை பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

★ சிறுகதை ★ கவிதை

## போட்டிகளில் கலந்து கொள்வோர் கடைப்பிடிக்க வேண்டியவை

★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளையோ சமூகப் பிரச்சினைகளையோ சித்திரிக்கும் வண்ணம் அமையலாம்.

★ படைப்புகள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதைஉறுதிப் படுத்த வேண்டும்.

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் ஜனவரி 31 ம் திகதிக்குப் பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

போட்டி முடிவுகள் யாவும் 17 02. 1995 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.

இப்போட்டிகளில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் ஆறாம் ஆண்டின் ஆரம்ப விழா மலரில் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானவை எனத் தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்கள் ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும்.

முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு ஆறாம் ஆண்டின் ஆரம்ப நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம் ஆறாம் ஆண்டுப் போட்டி' என கடித உறையில் இடது பக்கமேல் மூலையில் குறிப்பிடப்பட்டு,

**ஆசிரியர்,**
**ஈழநாதம்**
**31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்**

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பித்த பாடசாலைகளுக்கு தமது திணைக்களம் அடையாள அட்டை வழங்கிய விபரம் அடங்கிய அட்டவணை ஒன்றில் பாடசாலைகள் செயலகத்தில் விண்ணப்பம் ஒப்படைத்த திகதி, செயலகம் விண்ணப்பங்களை அனுப்பிய திகதி அடையாள அட்டை பெறப்பட்ட திகதி என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன்படி செயலக ஆட்பதிவு திணைக்களம் 30 பாடசாலைகளுக்குமட்டுமே அடையாள அட்டையைப் பெற்றுக் கொடுத்துள்ளமை தெரியவந்துள்ளது. யாழ் குடாநாட்டில் 169க.பொ.த சாதாரண தரம் வரையிலான வகுப்புகளைக் கொண்ட பாடசாலை மற்றும் உயர்தரவகுப்புகளை கொண்ட 62 பாடசாலைகளும் உள்ளன.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளில் அதிக மாணவர்கள் தோற்றும் நகர்ப்புறப் பாடசாலைகளில் கணிசமான அளவில் விடுபட்டுள்ளன. பரியோவான் கல்லூரி தவிர்ந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய பாடசாலைகள் நூறுக்கும் குறைந்தளவு விண்ணப்பங்களை சமர்ப்பித்தும் 30 பாட விக்கப்படுகின்றது.

### தடுப்பூசிகள்

கடந்த ஐப்பசி மாதத்தில் மட்டும் யாழ். மாவட்டத்தில் 61918 கோழிகளுக்கு கொள்ளைநோய் தடுப்பூசியும் 5825 கோழிகளுக்கு அம்மை நோய்த் தடுப்பூசியும் 1463 மாடுகளுக்கு தொண்டை அடைப்பானுக்கான தடுப்பூசியும் போடப்பட்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்துடன் இணைந்து கிராமம் தோறும் தடுப்பூசி போடும் நடவடிக்கையை மேற்கொண்டதன் மூலமாகவே இது சாத்தியமாயிற்று என்பது குறிப்பிடத்தக்கது.

சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு

## ஒதுக்கப்பட்ட நிதியில் அரைவாசிதிரும்பிசென்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கென 1994ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட 19 இலட்சம் ரூபாவில் 9 இலட்சம் ரூபாவே செலவிடப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

எனவே யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் பயன் படுத்தப்பட்ட நிதி போக மிகுதி 10 இலட்சம் ரூபாவும் சுகாதார அமைச்சிற்கு திரும்பியுள்ளதாக தெரியவருகின்றது.

இந் நிதியினை பயன் படுத்தாமைக்கு தமக்கு நிர்வாகச் சிக்கல்கள் இருந்தமைதான் காரணம் என சுகாதார அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அறியவருகின்றது. [பா, தி]

## உயர்கல்வி அமைச்சர் யாழ். வருவதில் ஆவல்

(வவுனியா)

தமிழ் பேசும் மக்களுக்கு தேவையான அமைதியையும் சமாதானத்தையும் தமது அரசு ஏற்படுத்திக் கொடுக்கும் என கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

வவுனியா வந்திருந்த அவர் தாண்டிக்குளம் கடைமுகாமில் தரித்து நின்ற மக்களுடன் உரையாடினார். இதன் போதே அவர் ''எமது அரசாங்கம் தமிழ்பேசும் மக்களுக்கு அமைதியான - சமாதானத்துக்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கதன்னை அர்ப்பணித்துள்ளது. நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என பிரார்த்திப்போம். கல்வி நிலையில் உயர்ந்து நின்றவர்கள் உங்கள் பிள்ளைகள் தான். இன்று அவர்களின் கல்வி நிலை படிப்படியாக குறைந்து வருவதை புள்ளி விபரங்களிலிருந்து அறிந்து கொண்டேன் யாழ்ப்பாண கல்வி நிலை மற்றும் பரீட்சைப் பெறுபேறுகள் ஒருகால கட்டத்தில் உயர்நிலையில் இருந்தது.

யாழ்ப்பாணத்தில் மக்கள் கஷ்டமான நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பது எமது அரசிற்குத் தெரியும். எங்களுடைய நாட்டிற்கு அமைதியும். சமாதானமும் உடனடியாகத் தேவை. அதனை ஏற்படுத்த எமது அரசு முழுமையாகப் பாடுபடுகிறது. உங்களுடைய ஆதரவு இவ்விடயத்தில் அவசியமாகிறது. நாடு பூராவும் அமைதி தேவை. அதற்காகவே நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்.

யாழ்ப்பாணம் வருவதற்காக ஆவலாயுள்ளேன். அதற்கான சந்தர்ப்பம் விரைவில் கிடைக்கும் என நம்புகிறேன் என்றார்.

## பார்சல் குண்டு; மீனவர் பலி

ஜா- எலப்பகுதியில் தண்டுகங்கை ஆற்றில் மீன் பிடித்துக்கொண்டிருந்த நபர் தூண்டிலில் வந்த பார்சலை வீட்டுக்கு எடுத்துச் சென்று திறந்த போது அது வெடித்ததில் பலியானார்.

பார்சல் வெடித்த போது அவர் அருகே இருந்த் வேறு மூவரும் காயமடைந்தனர்.


AL 95

## கணித - உயிரியல் பிரிவு

பகல் முழுநேர - மாலை நேர மீட்டல் வகுப்புகள்

## ஆரம்பம்: 23-12-94

| | | |
|---|---|---|
| இரசாயனவியல் | : | திரு. செல்வா |
| பௌதிகவியல் | : | திரு. ஞானி |
| | | திரு. வர்ணம் |
| | | திரு. ரவீந்திரநாதன் |
| தூய/பிரயோக | ( | திரு. குணம் |
| கணிதம் | ( | திரு. கிருஷ்ணா |
| தாவரவியல் | : | திரு. ஐங்கரநேசன் |
| விலங்கியல் | : | திரு. கெங்காதரன் |

- முழுப்பாடத்திட்டமும் பூர்த்தி செய்யப்படும்
- பாடசாலை செல்லாதவர்கள் மாத்திரமே பகல் முழுநேர வகுப்புகளில் கலந்து கொள்ளலாம்.
- 22-12-94 அன்று மாத்திரமே அனுமதி வழங்கப்படும்.
- நேரசூசிகையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
- 94இல் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

(சி-10935)

# வடக்கு-கிழக்கிற்கென கைத்தொழில் அதிகாரசபை நடவடிக்கை ஒருங்கிணைப்பிற்கு அவசியமாகும்

வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் பிரதேசம் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. இதனால் இப்பிரதேச அபிவிருத்தி இருபது ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன. இயல்பு நிலை இருந்த காலத்திலேயே வடக்கு - கிழக்குப் பிரதேசம் கைத்தொழில் ரீதியாகப் புறக்கணிக்கப்பட்டு வந்தது. இலங்கையின் மொத்தக் கைத்தொழில் நிலையங்களில் 9.4 சதவீதம் மட்டுமே இப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டதாக அறிய முடிகிறது. அமைக்கப்பட்ட சில தொழிற்சாலைகளும் இப்பிரதேச வளங்களைச் சுரண்டுவதாகவும் காலப்போக்கில் இவை இயங்க முடியாத நிலையை அடையக்கூடியனவாகவும் இருக்கின்றன. காங்கேசன்துறையில் அமைந்துள்ள சீமெந்து தொழிற்சாலை இதற்கு உதாரணமாக அமைகிறது. இவ்வாறாக அமைக்கப்பட்ட தொழிற்சாலைகளும் போர்ச் சூழ்நிலையால் முற்றாக செயல் இழந்ததுடன் பலத்த சேதத்திற்கும் உள்ளாக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா அரசாங்க உத்தியோக பூர்வ அறிக்கைகளின்படி 1993 ஆம் ஆண்டில் மட்டும் கைத்தொழில் வெளியீட்டின் பெறுமதி 14 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதைக் காணமுடிகிறது. இவ்வளர்ச்சி வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலுள்ள கைத்தொழில்களுக்குரியன. இந்த 14 சதவீத வளர்ச்சியில் பெரும்பங்கு வளர்ச்சியடைந்த தனியார் துறைக் கைத்தொழில்களிலிருந்து பெறப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி ஸ்ரீலங்கா அரசு கைத்தொழில் மையங்களை நிறுவி அப்பகுதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தேசிய அபிவிருத்தி வங்கியூடாக 41,140 இலட்சம் ரூபா நிதி வசதி செய்துள்ளது. இவற்றைவிட இதே ஆண்டில் இலங்கை அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம் 23230 இலட்சம் ரூபாவை கடனாக முதலீடுகளுக்கு செலுத்தியுள்

களைப் பூர்த்திசெய்யலாம் இவ்வாறான காரணங்களால் வடக்கு - கிழக்கிற்கென கைத்தொழில் - உணவுப்பதனிடுவதற்கான ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் அமைப்பது இன்றியமையாததும் (**Research & Development cen rts for Industries & Food processing**)

மேலும் எமது கைத்தொழில் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மேற்கொள்வதற்கு வடக்கு - கிழக்கிற்கென ''கைத்தொழில் அதிகார சபை'' நிறுவுதல் மிகவும் அவசியமாகும்.

வடக்கு - கிழக்குப் பிரதேச உடனடித் தேவைகளை இனங்கண்டு அவற்றிற்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் நாம் கட்டம் கட்டமாக நகர்ந்து எமது திட்டமிட்ட வரையறைகளில் தன்னிறைவு அடையமுடியும். இந்த வகையில் இனங்காணப்பட்டுள்ள கைத்தொழில்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அயராத உழைப்பிற்கும் மூளை வளத்திறனுக்கும் பெயர்போன வடக்கு - கிழக்கு பிரதேச மக்களின் ஒத்துழைப்புடனும் பல வெளிநாட்டவர்களின் உதவியுடன் இவ்விலக்கை மிக வேகமாக அடைய முடியும்.

இவற்றிற்கமைய இப்பிரதேசத்திற்குத் தேவையான கைத்தொழில்கள் பின்னால் விபரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறுவிபரிக்கப்பட்டுள்ள கைத்தொழில்களில்பாரியதொழிற்சாலைகளை எமது பிரதேச கிராமங்களில் அமைப்பது பொருத்தமானது. அவ்வாறு அமைப்பதனால் சன நெருக்கம் கூடிய நகரப்பகுதிகளில் ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்களைக் குறைப்பது மட்டுமன்றி கிராமப் புறங்களை அபிவிருத்தி செய்யும் அதே வேளையில் கிராமப் புறங்களிலுள்ளவர்களுக்கான அதிகளவு வேலைவாய்ப்பினையையும் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

எமது பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசத்தில் தனியார்துறைக் கைத்தொழில்கள் வளர்ச்சியடைய உந்துகோலாகவுள்ள கைத்தொழில் அபிவிருத்திச்சபை(IDB) மற்றும் தேசிய பொறியியல்

ந்து நெல்லாக தென்பகுதிக்குச் செல்கின்றது. எனவே இதை அரிசியாக்கி அனுப்புவதன் மூலம் வேலைவாய்ப்பையும் பெறுமதியையும் அதிகரிக்கச் செய்வதுடன் கால்நடைத்தீவன உற்பத்திக்கும் தேவையான தவிடும் கிடைக்கக் கூடியதாக இருக்கும் என்பது கவனத்திலெடுக்கப்பட்டு கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் நாளொன்றுக்கு பத்துதொன் உற்பத்தித் திறன் கொண்ட நவீன ஆலைகள் புதிதாக அமைக்கப்பட வேண்டும்.

**1.2. எண்ணெய் உற்பத்தி ஆலை**

தனிநபருக்குத்தேவையான உணவு எண்ணெய்களின் வருடாந்த அளவு 3.8 லீற்றர் என்ற அடிப்படையில் எமக்கு 9.5 மில்லியன் லீற்றர் எண்ணெய் தேவைப்படுகின்றது.

**கடந்த நவம்பரில் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற ''அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல்'' என்ற ஆய்வுப்பட்டறையில், வடக்கு, கிழக்கு கைத்தொழில் அபிவிருத்தி குறித்து சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கையை இங்கு தருகின்றோம்.**

இதை முழுவதும் ஈடுசெய்ய முடியாவிட்டாலும் முதல் வருட நகர்வில் 3000 மெ. தொன் எள், 4000 மெ. தொன் நிலக்கடலை என்பவற்றை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. எனவே இவற்றை எண்ணெயாக்க எண்ணெய் ஆலைகள் அவசியமாகின்றது. எள்ளிலிருந்து சுமார் 1000 மெ.தொன் எண்ணெயும் நிலக்கடலையிலிருந்து 1300 மெ. தொன் எண்ணெயும் [சுமார் 2 மில்லியன் லீற்றர்] பெறமுடியும். கிடைக்கும் பிண்ணாக்கு கால்நடைத் தீவன உற்பத்திக்கு உதவும்.

**1 3. பழம்சார் உற்பத்திகள்**

நான்கு சில்லு உழவு இயந்திரங்கள் 3000 எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. எனவே இதற்கான பாகங்களை முதற்கட்டமாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து பொருத்துதல் சிறந்ததெனக் கருதுகின்றோம். இதன்மூலம் நேரடியாக 200 பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்க முடியும் என்பதுடன் தொடர்புடையதாக கடைச்சல் தொழிற்சாலைகள் போன்ற சேவைத்தொழில்களும் விரிவாக்கம் பெறும் என எதிர் பார்க்கலாம்.

**1.6 சீனி உற்பத்தி ஆலைகள்**

எமது வருடாந்த சீனித் தேவை 55000 மெற்றிக் தொன் (25 இல 22 கி) என கணிப்பிடப்பட்டுள்ளது. இதில் கந்தளாய் சீனி ஆலையில் 9423 மெ. தொன் உற்பத்தி செய்யப்படலாம்(1988- ஆய்வறிக்கை) எனவே மீதி தேவையை ஈடு செய்ய கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய கரும்புச்செய்கையுடன் கூடிய கரும்பு சீனி ஆலை ஒன்று அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் மேலதிக தேவைக்கான சீனியை எமது பனை வளத்தினை பயன்படுத்துவதன்மூலம் ஈடுசெய்யலாம் என்பதைக் கொண்டு யாழ் கொடிகாமத்தில் ஒரு பனஞ்சீனி ஆலையை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதன் உற்பத்தியில் கிடைக்கும் மதுசாரம், கைத்தொழில் தேவைகளுக்குப் பயன்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

களில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் நாளொன்றுக்கு 15000 கிலோ திறன்கொண்ட கால்நடைத்தீவன ஆலைகள் புனரமைக்கப்பட வேண்டும்.

**0.2 கால்நடை சார் கைத்தொழில்கள்**

**2.1 பால்பதனிடல்நிலையம்**

வடக்கு கிழக்கு மாகாணத்தில் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான பால் தரும் கால்நடைகளும் மூன்றரை இலட்சத்துக்கு மேற்பட்ட ஏனைய இனங்களும் இருப்பதாக புள்ளிவிபர தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் யாழ்மாவட்டம் போன்ற இடங்களில் கால்நடைகள் குறைவாக இருப்பதுடன் பாலுக்கு பெரும் கேள்வியும் உள்ளது. எனவே கிடைக்கும் பால் பதனிடப்பட்டு தேவையான இடங்களுக்கு விநியோகிக்க வேண்டியுள்ளது. எனவே மாங்குளத்தில் ஒரு பால்பதனிடல் நிலையம் ஒன்றை அமைக்க வேண்டியுள்ளது.

இத்தொழிற்சாலை இரண்டாம் மூன்றாம் ஆண்டு நகர்வில் வெண்ணெய், பாற்கட்டி போன்ற பால்சார் உற்பத்திகள் செய்வதிலும் நான்காம் ஐந்தாம் ஆண்டு நகர்வில் பால்மா உற்பத்தி தொகுதியாக மாற்ற திட்டமிடப்படுதல் சிறந்தது.

**2.2 தோல் பதனிடல் நிலையம்**

வடக்கு-கிழக்கு பகுதிகளில் வருடாந்தம் இறைச்சிக்காக வெட்டப்படும் [கால்நடைகளின் எண்ணிக்கை 21000 என தெரிவிக்கப்படுகின்றன. எனவே இத்தோலை பதனிட வேண்டிய தொழிற்சாலைகள் அவசியமாகின்றது இது வரை காலமும் தோல்கள் உப்பிடப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டு வந்தன. இத்தோல் அங்கு பதனிடப்பட்டு பலமடங்கு பெறுமதியான மூலப்பொருளாக மீண்டும் இங்கு கொண்டு வரப்பட்டது. ஆனால் இப்போது நாம் தோலைப் பதனிடுகின்றோம். அதுவும் இரசாயனங்களின் உதவியின்றி என்பது அங்கு குறிப்பிடத் தக்கது' எனவே இரசாயனங்கள் மூலமும், தாவரங்கள் மூலமும்

இரு தொழிற் சாலைகள் முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அமைப்பது சிறந்ததாகும்.

**0.3 கடல்வளம் சார் கைத்தொழில்கள்**

**3.1 கடலுணவு பதனிடல் தொழிற்சாலை**

அடுத்ததாக கடல்வளம் சார் கைத்தொழில்களை கவனத்திலெடுக்கும் போது எமது பிரதேசம் மிகப் பெரும் கடல் வளத்தை உள்வாங்கியுள்ளது ஏற்றுமதி வளம் கொண்ட, இந்த வளத்தில் நாம் பெரும் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. 1983 இன் அரச தகவல்களின்படி 104315 மெற்றிக் தொன் மீன் பிடிக்கப்பட்டது. (இலங்கையின் மொத்த உற்பத்தியில் 56 % ஆகும்.) இது எமது தன்னிறைவு தேவைக்கு மிக அதிகமாகும். தனிமனித நுகர்வுக்கு 8.4 கி கி. என்ற அடிப்படையில் 21000மெ.தொன் மீன் எமது தேவைக்குப் போதுமானதாகும். எனவே மிகுதியைப் பதப்படுத்தி அனுப்புதல் அவசியமாகின்றது.

நாளாந்தம் 2500 கிலோ அதாவது வருடாந்தம் 1000 மெ. தொன் கடலுணவை பதனிடக் கூடிய இரு பதனிடும் தொழிற்சாலைகள் இங்கு முன்பு இயங்கின.

மேலும் முல்லைத்தீவு, மன்னார் ஆகியஇடங்களில் புதிதாக இரு தொழிற்சாலைகள் அமைக்கப்படுதல் அவசியமாகின்றது,

**3.2 பனிக்கட்டித் தொழிற்சாலை**

கடற்றொழிலுக்கும் கடலுணவு பதனிடலுக்கும் பனிக்கட்டி அவசியமாகின்றது. புதிதாக முல்லைத்தீவு, மன்னார், தாழையடி ஆகிய இடங்களில் பனிக்கட்டித் தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டும்.

**3.3 வலைத்தொழிற்சாலை, மிதப்பு உபரணங்கள்**

சீநோர் அமைப்பின் கீழ் இயங்கி வந்த வலைத் தொழிற்சாலை புனரமைக்கப்பட வேண்டும். அத்துடன் மேலதிக ஆலை

அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**0.4 கப்பல் கட்டும் தொழிலகங்கள்**

**4.1 பிளாஸ்ரிக் படகு உற்பத்தி**

மீன்பிடி பெரிய அளவு அதிகரிக்கும் போது பிளாஸ்ரிக் படகுகளின் தேவை அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது. எனவே காரைநகரில் அமைந்துள்ள சீநோர் படகு தொழிற்சாலையின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யக்கூடியதாக புனரமைப்பதுடன் மேலதிக தேவையை ஈடு செய்ய முல்லைத்தீவிலும் ஒரு தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டியுள்ளது.

**4.2 கப்பல் பழுதுபார்க்கும் நிலையம்**

மீன் பிடி. படகுகள் 15000 வரை இருந்ததாக 1983 புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன- சிறியளவிலான பழுதுபார்க்கும் நிலையங்கள் தற்போது இயங்கி வந்தாலும் காங்கேசன்துறை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பாரிய கப்பல் பழுதுபார்க்கும் நிலையங்கள் அமைக்கப்படுதல் சிறந்தது என கருதுகின்றோம்.

**0.5 இரசாயனம் சார் கைத்தொழில்கள்**

**5 1 இரசாயன தொழிற்சாலை**

இரசாயனம் சார் கைத்தொழிலைக் கவனத்தில் கொள்ளும் போது முதலில் கடல்சார்ந்த உப்பு உற்பத்தியையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. எமது உப்பு உற்பத்தி 60000 மெ. தொன்களாகும். ஆனால் எமது தேவை 15060 மெ. தொன் மட்டுமேயாகும். எனவே உப்புசார் கைத்தொழில்களில் கவனமெடுத்தல் அவசியமாகின்றது.

சவர்க்கார உற்பத்தி, புடவைக் கைத்தொழில், கடதாசி ஆலை என்பனவற்றின் தேவைக்கு இவ் இரசாயனப் பொருட்கள் உதவும்.

(தொடரும்)

நிதி கூட்டுத்தாபனம் 23230 இலட்சம் ரூபாவை கடனாக முதலீடுகளுக்கு செலுத்தியுள்ளது. இவற்றிற்கும் மேலாக வர்த்தக வங்கிகளும் இதேயளவு தொகையை கடனாக வழங்கியுள்ளது. இதை நோக்கும் பொழுது எமது பிரதேசத்திற்கென ''கைத்தொழில் அபிவிருத்தி நிதியம்'' நிறுவுவது அவசியமாகத் தெரிகின்றது ஸ்ரீலங்காவின் ஏனைய பகுதிகளிலுள்ள கைத்தொழில் விரிவாக்க ஆராய்ச்சி நிலையங்களான இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிலையம் (C.I.S.I.R), தென்னை ஆராய்ச்சி நிலையம் (C.R.I) இறப்பர் ஆராய்ச்சி நிலையம்(R.R.I), தேயிலை ஆராச்சி நிலையம் (T.R.I), மூலவள ஆய்வு நிறுதனம் (IFS) கைத்தொழில் அபிவிருத்திசபை(I.D.B) போன்ற ஆராய்ச்சி நிலையங்கள் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் நிறுவப்படவில்லை. இத்தகைய ஆராய்ச்சி நிலையங்கள் கைத்தொழில் வளர்ச்சிக்கு அவசியமாக இருப்பினும் வடக்கு-கிழக்குப் பிரதேசத்திற்கு இவைகளின் சேவை கிடைக்கவில்லை என்றே சொல்லலாம். இவ்வாறே சுதந்திர வர்த்தக வலயம் போன்றவையும் இப்பிரதேசத்தில் நிறுவப்படவில்லை.

மேற்காணப்படும் பின்னடைவுகளையும் தடைகளையும் ஆராயுமிடத்து வடக்கு - கிழக்கு பிரதேச தேவைகளை நாமே நிவர்த்தி செய்ய வேண்டிய அவசியமேற்பட்டிருப்பதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. எம்மிடையேயுள்ள மூலவளங்கள், மனித வளங்கள் துறைசார் நிபுணத்துவம் அனைத்தையும் ஒன்றிணைத்து உபயோகப்படுத்துமிடத்து நல்ல பலனைப்பெற்றுக் கொள்ளலாமென்பது கண்கூடு. இவ்வளங்களின் உச்சப்பயனை உபயோகிக்கும் போது தேவையேற்படின் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்து இப்பிரதேச தேவை கோலாகவுள்ள கைத்தொழில் அபிவிருத்திச்சபை(IDB) மற்றும் தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (NERD) போன்ற அமைப்புக்கள் இங்கில்லாமை, எமது பிரதேச தனியார் துறை கைத்தொழில்கள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியடையாமைக்கு காரணமாகவுள்ளது.

எமது பிரதேசத்தில் அமைக்கக் கூடிய கைத்தொழில்களை இனங்கண்டு இவற்றை கைத்தொழில்சார் பகுதி ரீதியாக பதினொரு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து, இடவசதி நுகர்வு, குடிப்பரம்பல்மற்றும் உட்கட்டுமான வசதிகளை அடிப்படையாகக் கொண்டு கைத்தொழில் அமைவிடங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. அமைவிடங்கள் தீர்மானிக்கும் போது எமது வளங்கள், சூழல் என்பன பாதிப்படையாமல் பாதுகாப்பதில் பூரண கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

### 01. விவசாயம் சார் கைத்தொழில்கள்

### 1.1. அரிசி ஆலைகள்

வடக்கு, கிழக்கின் சனத்தொகை கிட்டத்தட்ட இருபத்தைந்து இலட்சம் (2500000) என கணக்கிடப்பட்டுள்ளது. எமது சராசரி அரிசி நுகர்வு ஆண்டொன்றுக்கு 100.25 கி. கிராம் என்ற அடிப்படையில் எமக்கு வருடாந்தம் 250750 மெற்றிக்தொன் அரிசி தேவைப்படுகின்றது. இவ் அரிசியை நாம் 374300 மெ.தொன் நெல்லிலிருந்து (67%) பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் வடக்கு, கிழக்கில் 1990ஆம்ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட நெல்லின் மொத்த அளவு 609000 மெ. தொன் என புள்ளிவிபர தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே நாம் வருடமொன்றிற்கு 157000 மெ.தொன் அரிசியை சிறிலங்காவின் தென் பகுதிக்கு அனுப்பக் கூடியதாக இருக்கின்றது. கிழக்கில் சுமார் பத்து பாரிய அரிசி ஆலைகள் அமைக்கப்பட்டிருந்த போதிலும் வடக்கிலிரு

உதவும்.

### 1 3. பழம்சார்உற்பத்திகள் காய்கறி பதனிடல்

எமது பழங்கள் மிக பிரசித்தியானவை. மாம்பழம், தக்காளிப்பழம் என்பன முன்பிருந்தே தெற்கிற்கு அனுப்பப்பட்டன. எனவே இவற்றைப் பழமாக அனுப்பாமல் பதனிட்டு ஜாம், கோடியல், பழரசம் போன்றவையாக மாற்றி அனுப்புவதன் மூலம் நாம் இவற்றின் பெறுமதியை அதிகரிக்கப் பண்ணுவதுடன், வேலை வாய்ப்பையும் அளிக்கக் கூடியதாக அமையும். எனவே பதனிடும் தொழிற்சாலைகள் முல்லை., யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 1.4. விவசாய உபகரணங்கள், இயந்திரங்கள்

விவசாயத்தின் வளர்ச்சியையும் இவற்றிற்கு தேவையான உபகரணங்களையும் கருத்திலெடுத்த போது எமது வட பகுதி தேவை மட்டும் பின்வருமாறு அமைந்துள்ளன:

| | | |
|---|---|---|
| மண்வெட்டிகள் | | |
| யாழ் மாதிரிகள் | | 40000 |
| | 7 10 | 45000 |
| தெளிகருவிகள் சிறியவகை | | 6000 |
| ,, | பெரியவை | 550 |
| நீர் இறைக்கும் இயந்திரங்கள் | | |
| 02'' மண்ணெண்ணெய் | | 34000 |
| | மின்சாரம் | 10500 |
| சூடடிக்கும் கருவி | | 450 |

இவ்வுற்பத்திகள் முழுவதும் முதல் வருடத்தில் ஆரம்பிக்க முடியாவிட்டாலும் குறிப்பிட்ட வீத உற்பத்திகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. எனவே இதற்கான நிலையங்களை முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் அமைக்கலாம் எனகருதப்படுகின்றது.

### 1.5 இரண்டு சில்லு நாலு சில்லு உழவு இயந்திரங்கள் பொருத்துதல்

எமது தேவையாக இரண்டு சில்லு உழவு இயந்திரங்கள் 4000

தேவைகளுக்குப் பயன்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 1.7 காகித ஆலை

அடுத்து வைக்கோல் போன்ற மூலப் பொருட்களைக் கொண்டு இயங்கும் வாழைச்சேனை காகித ஆலை 2533 மெ. தொன் காகிதாதிகளையும் 3849000 அப்பியாசக் கொப்பிகளையும் உற்பத்தி செய்வதாக தரவுகள் தெரிவிக்கின்றன. இவை எமது தேவைக்கும் போதுமானதாகும் எனினும் தொழிற்சாலை மேலும் நவீனப்படுத்தப்பட வேண்டியதுடன் சிப்போட் தயாரிப்பிற்கான இயந்திர வகைகளும் இணைக்கப்படவேண்டும்.

### 1.8 தும்பு / தும்புசார் உற்பத்திகள்

தமிழீழத்தில் 10900000 பனைகளும் 500000 - தென்னைகளும் உள்ளன. ஆனால் நாம் நவீனமயப்படுத்தப்பட்ட தொழிற்சாலைகள் இல்லாததால் சகல தும்புசார் உற்பத்திகளையும் வெளியிலிருந்தே பெறுகின்றோம். எம்மிடமுள்ள தென்னை மட்டைகளில் கால்ப்பங்கை பதனிட்டாலே நாம் தும்பு உற்பத்தியில் தன்னிறைவைக் காணமுடியும். எனவே நவீனமயமான தும்பு ஆலைகளை வன்னி, மன்னார் ஆகிய இடங்களில் அமைக்க திட்டமிட்டுள்ளோம்.

### 1.9 கால்நடைத்தீவன தொழிற்சாலை

இத்தொழிற்சாலை எமக்கு முக்கிய தேவையாக உள்ளது கால்நடைத்தேவையை ஈடு செய்ய ஏற்கனவே நாம் பல முயற்சிகளை ஆரம்பித்துள்ளோம். சோளப்பயிர்ச்செய்கை முழு அளவில் ஊக்குவிக்கப்படுகின்றது. எனவே நாம் முல்லைத்தீவில் ஒரு கால்நடைத்தீவன தொழிற்சாலையை நிறுவ தீர்மானித்துள்ளதுடன் மீன்தூள் உற்பத்தி, எலும்புத்தூள் உற்பத்தி என்பவற்றை மண்டைதீவில் நிறுவ உத்தேசித்துள்ளோம். யாழ் பாற்பண்ணை மற்றும் தனியார் உற்பத்தி நிலையங்

அங்கு குறிப்பிடத் தக்கது. எனவே இரசாயனங்கள் மூலமும், தாவரங்கள் மூலமும் பதனிடக்கூடிய திறனுடைய தொழிற்சாலை புனரமைக்கப்பட வேண்டும். அத்துடன் மேலதிக ஆலையொன்று முல்லைத்தீவில் றின் தேவைக்கு இவ் இரசாயனப் பொருட்கள் உதவும்.

(தொடரும்)

# கல்வி நிர்வாக கட்டமைப்பு பெப்ரவரியில் மாற்றப்படும்

## உயர் கல்விஅமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் கல்வி நிர்வாகத்தில் எதிர்வரும் பெப்ரவரி முதல் மாற்றம் கொண்டு வர உள்ளதாக உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்.

புதிய திட்டத்தின்படி வட்டாரக் கல்வி அலுவலகங்கள் ஏற்படுத்தப்படவுள்ளது. இவற்றை இணைத்து வலய கல்வி அலுவலகங்கள் அமைக்கப்படும் வலய கல்வி அலுவலகங்களின் தலைமை அலுவலகமாக மாவட்ட கல்வி அலுவலகங்கள் இயங்கும் மாவட்ட கல்வி அலுவலகங்கள்மாகாணகல்வி அமைச்சின் கீழ் இயங்கும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஆசிரிய சம்பள விபரம், சுய விபரக்கோவை என்பன மாவட்ட கல்வித் திணைக்களத்திலேயே இருக்கும் இதே சமயம் வலய கல்வி அலுவலகத்தில்கல்வி அபிவிருத்திப் பிரிவு, கல்வி நிர்வாகப்பிரிவு ஆகியன ஏற்படுத்தப்படும். மாவட்ட கல்விப் பணிப்பாளருக்கு உதவியாக மேலதிக கல்விப்பணிப்பாளர் நியமிக்கப்படுவார்.

இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் முன்னர் நியமனம் கிடைக்காத தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

# ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை பாடத்திட்டத்தில் மாற்றம் வரும்?

## கணிதத்திற்கு பதில் வரலாறு, இலக்கியம்

(கொழும்பு)

ஆண்டு 5 புலமைப் பரிசில் பாடத்திட்டத்தில் மாற்றம் கொண்டு வர உயர் கல்வி அமைச்சு வட்டாரத்தில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இப்பரீட்சைக்கு மொழியும் கணிதமுமே பாடத்திட்டங்களாக அமைந்துள்ளது. இதனால் மாணவரிடையே தோன்றும் கஷ்ட நிலையை நீக்க இம்மாற்றம் குறித்து ஆலோசிக்கப்படுவதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கணிதத்திற்கு பதிலாக வரலாறு, இலக்கியம் ஆகிய பாடத்திட்டங்களை சேர்க்க ஆராயப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# சமாதானத்திற்கு முரணான படையினரை இணங்கச்செய்ய முயற்சி

அரசபடையினரின் ஒரு பிரிவினரின் செயற்பாட்டில் மாற்றம்செய்வதற்காக அரசு உறுதியான திரைமறைவு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கொழும்பு தமிழ் தினசரி ஒன்று தெரிவிக்கின்றது. சமாதானப்பேச்சு தொடர்பாக இணக்கமற்ற போக்குக் கொண்ட படைப்பிரிவினரிடையே இணக்கம் ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட மறைமுக நடவடிக்கை இப்போது வெளிவருகின்றன.

இதேசமயம் சமாதான முயற்சிகளுக்கு முரணாக தொடர்பு சாதனங்கள் செயற்படக்கூடாது என்றும் அரச உயர் மட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும் அப் பத்திரிகை தெரிவிக்கின்றது.

## சிந்தனைக்கு..

சொல்லுக்கு ஏற்ற செயலும்
செயலுக்கு ஏற்ப சொல்லும் அமையுமாறு
பார்த்துக் கொள்ள வேண்டும்.

- ஷேக்ஸ்பியர்.


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 20-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05


# தடைகளின் நீக்கமே பேச்சுகளின் வெற்றி

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வே ஒரேவழிமுறை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான அரசாங்கம் கூறிக்கொண்டாலும், கடந்த காலத்தில் தோற்றுப்போன பல வழிமுறைகளையும் அது கைவிடுவதாக இல்லை. அவற்றிற்கான முயற்சிகளையும் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

இந்தவகையில் முக்கிய இடம் பெறுவது இராணுவத்தைப் பல்வேறு வழிகளிலும் பலப்படுத்தும் முயற்சியாகும். இந்த வகையிலேயே இராணுவத்திற்கான உயர்ந்தளவு நிதி ஒதுக்கீடு, நவீன ஆயுதக் கொள்வனவிற்கான கேள்விப்பத்திரம் கோரல், இராணுவக் கட்டமைப்பில் விரிவாக்கம் செய்தல் என்பனவற்றைக் கொள்ளலாம்.

இதேசமயம், சந்திரிகா குமாரதுங்கா இராணுவத் தீர்வினை முற்று முழுதாக ஒதுக்கி விடவில்லை என்பதையும் தனது பேச்சுக்களிலும், பேட்டிகளிலும் வலியுறுத்தியுள்ளார். இறுதியாக 'ரைம்' சஞ்சிகைக்கு அவர் அளித்த பேட்டியில் 'ஏனைய நடவடிக்கைகள் தோல்வியடைந்தால் இராணுவ நடவடிக்கைகளை நான் நிராகரிக்கமாட்டேன்' எனத் தெரிவித்துள்ளார்.

அடுத்த அம்சமாக தமிழ்க்குழுக்களுடனும் இனப்பிரச்சினை குறித்துப் பேசப்படும் என்ற அறிவிப்பு உள்ளது. இவ் அறிவிப்பிற்கு ஏற்ப தமிழ்க்குழுக்களுடன் சில சந்திப்புக்களையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நடத்தியுள்ளார். இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் குறித்துப் பேசியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தவகையில் பார்க்கும் போது விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் இராணுவ தீர்வை நாடவும், அரசியற்தீர்வு என்ற ரீதியில் தமிழ்க்குழுக்களுடன் பேச்சு நடத்தவும் அரசாங்கம் தயாராக இருப்பதாகத் தெரிகின்றது. இதனைச் சற்று சந்தேகம் கொண்டு நோக்குபவர்கள், விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை காலத்தை தமது அரசாங்கத்தை ஸ்திரப்படுத்தவும், இராணுவ விரிவாக்கத்தைச் செய்யவும் அரசாங்கம் முற்படுகின்றது என யாராவது விமர்சனம் செய்தாலும் தவறில்லை என்றே கூறலாம்.

1993 / 94 கல்வியாண்டிற்கான

## மருத்துவத்துறைக்கு மேலும் 70 பேர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக 1993/94 கல்வியாண்டில் மேலும் 70 மாணவருக்கு மருத்துவபீடத்திற்கான அனுமதி கிடைத்துள்ளது. இது தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மேற்படி மாணவர்களுக்கு கடிதமூலம் அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு யாழ். மாவட்டத்திலிருந்து நான்கு மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர். இவர்களுக்கு முன்னராக பல்லறுவை மருத்துவத்துறை கிடைத்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி கல்வியாண்டிற்கான மருத்துவபீட வெட்டுப்புள்ளி முன்னதாக 266 ஆக தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் இது தற்போது 265 ஆக குறைக்கப்பட்டுள்ளதால் மேலும் 70 பேர் மருத்துவபீட அனுமதியை பெற்றுள்ளனர்.

இவ்வெட்டுப்புள்ளி குறைப்பினால் 93/94 கல்வியாண்டில் ஏனைய பீடங்களிலும் மேலதிக மாணவர்களுக்கு அனுமதி கிடைக்கும்.

## அண்மைய மழையினால் குண்டும் குழியுமாக வீதிகள்

சங்கானை ஏழாம் கட்டையிலிருந்து சந்தைச் சதுக்கம் வரையான பிரதான வீதி சீர்திருத்தப்படுகிறது.

மேற்குறித்த வீதிக்கு தார் ஊற்றி செப்பனிடும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. பல அசௌகரியங்களுக்கு மத்தியில் பிரயாணத்தினை மேற்கொண்டு வந்த பயணிகள் இந்த வீதி திருத்தம் மேற்கொள்ளப்படுவதை பெரிதும் வரவேற்றுள்ளனர்.

இதேவேளை சங்கானை சந்தை சதுக்கத்திலிருந்து சித்தன்கேணி மூளாய் வரையான பிரதான வீதி குண்டும் குழியுமாகவே காணப்படுகிறது. இந்தபாதையில் அண்மையில் பெய்த பெருமழை காரணமாக சில இடங்களில் பாரிய சேதத்துடன் கூடிய குழிகள் பரவலாக காணப்படுகின்றன.

சாவகச்சேரி பெற்றோல் நிலைய சந்தியில் இருந்து நவீன சந்தை வரையான பிரதான வீதிப் பகுதி குண்டும் குழியுமாக காணப்படுவதால் பாதசாரிகளும் சைக்கிளோட்டிகளும் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக மழை நாட்களில் இக் குண்டு குழிகளில் தேங்கி நிற்கும் சேறுகலந்த மழைநீர் வேகமாகச் செல்லும் வாகனங்களினால் நடந்தும், சைக்கிள்களிலும் செல்லும் மக்கள் மீது வாரியிறைக்கப்படுகின்றது. (41, 22)

## ஹெலி விவகாரம் அமெ. - கொரியா இழுபறி

(வாஷிங்டன்)

அமெரிக்க ஹெலிகொப்ரர்களை வடகொரியா சுட்டு வீழ்த்தியதினால் ஏற்பட்ட நெருக்கடிகள் குறித்து ஆராய்வதற்கென அமெரிக்க - வடகொரிய உயரதிகாரிகள் நேற்று பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள். அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் ஹெலிகொப்ரரில் இருந்த இரு விமானிகளையும் விடுவிப்பதற்கென ஐ. நா. ஸ்தாபனத்துடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த ஏ.எவ்.55 ரக ஹெலிகொப்ரர் உளவறியும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாகவடகொரியா குற்றம் சாட்டியுள்ளது. இந்த ஹெலிகொப்ரர் வழமையான பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது என்றும் தவறுதலாக எல்லைப்புறத்தின் மேலாகப் பறந்துவிட்டது என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## செஸ்னிய அகதிகள் ரஷ்ய படையால் கொலை

# பல்கலைக்கழக மாணவர் விடுதிகளை மூடிவிட மானிய ஆணைக்குழு திட்டம்

(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களிலுமுள்ள மாணவர் விடுதிகளை மூடிவிடுவதற்கு பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்து வருகிறது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக பல்கலைக்கழகங்களின்விடுதிகளில் தங்கிகல்விபயிலுகின்ற மாணவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா கொடுப்பனவை வழங்கிவிட்டு மாணவர் விடுதிகளை மூடிவிட திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு சகல பல்கலைக்கழகங்களுக்கும் அறிவித்துள்ளது.

எனினும் தற்சமயம் மாணவர் விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களை விடுத்து புதிதாக மாணவர்கள் விடுதிகளில் தங்க அனுமதித்தல் நிறுத்தப்படலாம் என அறிய வருகின்றது

இது தொடர்பாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு யாழ் பல்கலைக்கழகத்திற்கும் அறிவித்துள்ளதாக தெரியவருகின்றது.

இதனை அடுத்து யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் ஒவ்வொரு துறைக்கும் பொறுப்பான நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கு இவ்விடயம் தொடர்பாக அறிவித்துள்ளார் என அறிய வருகின்றது. (பா)

பல்கலை. அனுமதிக்கு காத்துள்ள

# இரு ஆண்டு மாணவர்களுக்கும் ஒரே ஆண்டில் அனுமதி?

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதிக்கு காத்திருக்கும் இரு ஆண்டு மாணவர்களையும் ஒரே கல்வியாண்டில் கல்வி கற்க அனுமதிப்பது தொடர்பாக நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களிடம் இருந்தும் அபிப்பிராயங்களை பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக யாழ் பல்கலைக்கழகத்திற்கும் சுற்று நிருபம் ஒன்றை பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு அனுப்பிவைத்துள்ளதாக யாழ்- பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க- குணரத்தினம் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

இவ்வாறு நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களிடம் இருந்தும் இவ்விடயம் தொடர்பான அபிப்பிராயங்கள் பெறப்பட்டதும் அவற்றினை பரிசீலனை செய்து பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு, உயர்கல்வியமைச்சு போன்றவை இறுதி முடிவை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டது.

இவ் விடயம் தொடர்பாக கடந்த ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி கொழும்பில் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்களும், பல்கலைக்கழக துணை வேந்தர்களும், உயர்கல்வி சார் அதிகாரிகளும் கூடி ஆராய்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## பார்சல் குண்டினால் இளம் பெண் காயம்

வீதியில் கண்டெடுத்த பார்சல் ஒன்றை திறந்து பார்த்த போது அதற்குள்ளிருந்த குண்டு வெடித்து இளம்பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

நீர்கொழும்பில், கட்டுவ என்னுமிடத்தில் நடந்த இச் சம்வபத்தில் இரண்டு பிள்ளைகளின் தாயான நிர்மலா (வயது - 33) என்பவரே பார்சல் குண்டு வெடித்து படுகாயமடைந்தவர் ஆவார்.

## ஈரான் கோரிக்கை

(தெஹ்ரான்)

மத்திய கிழக்கு அணுஆயுத தடை வலயமாக பிரகடனப் படுத்தப்பட வேண்டும் என ஈரான் கேட்டுள்ளது.

## விமானவிபத்து 28 பேர் பலி

பப்புவா நியூகினியில் இடம் பெற்ற விமான விபத்தொன்றில் 28 பேர் பலியாகியுள்ளனர்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-12-20

செவ்வாய் இரவு

08.01 - ஊர்சுற்றும் ... [illegible]

## வைத்தியர் வேலை நிறுத்தம் மூவர் உயிரைப் பறித்தது

[கொழும்பு]

தென்னிலங்கையில் நடைபெறும் வைத்தியர்கள் வேலை நிறுத்தத்தினால் மாத்தறை ஆஸ்பத்திரியில் மூன்று நோயாளிகள் சிகிச்சை இன்றி பரிதாபகரமாக மரணித்தனர்.

அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட உடவலவைச் சேர்ந்த பிரேமவதி (25) அம்பாந்தோட்டையை சேர்ந்த எஸ். பி. பிரேமசந்திரா, ஐ. பத்மினி (27) ஆகியோரே இவ்வாறு மரணமடைந்தவராவர் பிரேமசந்திராவும் பத்மினியும் விஷம் அருந்தியதற்காகவும் பிரேமாவதி விபத்தினால் காயமுற்றதாலும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டனர் உடனடி சிகிச்சை அளிக்கப்பட்டிருப்பின் இவர்கள் உயிர் பிழைத்திருப்பர் எனக் கூறப்படுகிறது.

சந்தேகம் கொண்டு நோக்குபவர்கள், [illegible] டனான பேச்சுவார்த்தை காலத்தை தமது அரசாங்கத்தை ஸ்திரப்படுத்தவும், இராணுவ விரிவாக்கத்தைச் செய்யவும் அரசாங்கம் முற்படுகின்றது என யாராவது விமர்சனம் செய்தாலும் தவறில்லை என்றே கூறலாம்.

ஆனால் சந்திரிகா அரசாங்கம் அவ்வாறான தனது முயற்சிகளுக்குக் காரணம் கற்பிக்க முற்படலாம். கடந்த காலப் பேச்சுவார்த்தைகள் முறிந்து போர் தொடங்கியதைக் குறிப்பிடலாம். யாழ். மாவட்டத்திற்கென நடந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது ஈ.பி.டி.பியினரை 'ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள்' எனவும் கூறிக் கொள்ளலாம்.

ஆகையினால் அரசாங்கத்தின் இந்நடவடிக்கை குறித்த விமர்சனங்கள் நிராகரிக்கப்படலாம். ஆனால் இவை யாவும் கடந்த காலத்தில் ஐ. தே. க. அரசாங்கம் பயன்படுத்தித் தோல்வி கண்ட வழிமுறைகள் என்பதை மட்டும் ஒருமுறை ஜனாதிபதி சந்திரிகாவிற்கு ஞாபகப்படுத்தலாம். இம்முயற்சிகள் பொருட் செலவிற்கும், உயிரழிவிற்கும் வழிவகுக்குமே ஒழிய வேறுவகையில் பயன்படப் போவதில்லை.

ஆனால்இவற்றை அரசாங்கத்தின் வேறு வகையான முயற்சி எனத் தவிர்த்துக் கொண்டாலும், இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வே வழி எனக் கூறிவிட்டு இருந்துவிட்டால் மட்டும் சமாதானத் தீர்வு ஏற்பட்டு விடப் போவதில்லை என்பதை அவர்கள் புரிய வேண்டும். சமாதானத்தீர்விற்கு முட்டுக்கட்டையாகவுள்ள தடைகள் யாவும் அரசால் தீர்த்து வைக்கப்பட்டாக வேண்டும். அவ்வாறு அரசாங்கம் தீர்த்து வைக்க முன்வராதுவிட்டால், அதனை அரசின் கூற்றிற்கும் செயற்பாட்டிற்கும் உள்ள முரண்பாடாகவே கருத வேண்டும்.

கடந்த ஐ.தே.க. அரசாங்கமும் அவ்வாறே செய்தது. சுமார் ஒரு வருடத்திற்கு மேலாக பேச்சுவார்த்தை நடத்தினும், இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் ஒரு அங்குலம் தானும் முன்னேறவோ அன்றி விட்டுக் கொடுக்கவோ அரசாங்கம் தயாராக இருக்கவில்லை. அதாவது இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில் தீர்வு காண முயற்சிகள் எதையும் அரசாங்கம் எடுக்கவில்லை. இதன் காரணமாகபேச்சுவார்த்தை தோல்வியில் முடிவுற்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலை இம்முறை பேச்சுவார்த்தையிலும் ஏற்படாது தடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதை விடுத்து பேச்சுவார்த்தை முன்னேற முடியாமல் அனைத்துத் தடைகளையும் வைத்துக் கொண்டு பேச்சுவார்த்தை முன்னேற முடியாமல் தடைப்படும்/குழம்பும் நிலை ஏற்படுமானால் அதற்கு யாரையும் குறை சொல்வதில் அர்த்தம் இருக்காது. இந்த நிலையில், அரசாங்கம் பேச்சுவார்த்தை குழம்பினால் அடுத்த கட்டம் என்ன என்பதை இன்று சிந்திப்பதை விட பேச்சுவார்த்தை குழப்பமடைவதற்குக் காரணமாகவுள்ள முட்டுக்கட்டைகளைத் தீர்க்க முனைவதே அவர்கள் சமாதானத்தின் மீது கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துவதாக இருக்கும்.

## செஸ்னிய அகதிகள் ரஷ்ய படையால் கொலை

(மாஸ்கோ)

செஸ்னியாவிலிருந்துதப்பிச் சென்ற 9 அகதிகளை ரஷ்ய துருப்புகள் சுட்டுக் கொன்றுள்ளனர். இந்நிலையிலும் சமரச பேச்சுகளுக்கு அரசதரப்புக் குழு ஒன்றை ரஷ்யா செஸ்னியாவிற்கு அனுப்பிவைக்குமானால் தாம் சமாதானப் பேச்சுக்களை நடாத்த தயாராக இருப்பதாக செஸ்னிய தலைவர் கூறியுள்ளார்.

கொல்லப்பட்ட அகதிகள் காரில் சென்று கொண்டிந்த போது செஸ்னியா எல்லை அருகேவைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக நேரில் கண்டவர்கள் கூறியுள்ளனர்.

## ஆடம்பர நிர்மாணங்கள் சீன அரசு தடை

அதிநவீன ஆடம்பரக் கட்டிட நிர்மாணங்களுக்கு சீனா நேற்றுமுதல் தடைவிதித்துள்ளது. 1996 வரை இத்தடை அமுலில் இருக்கும். அத்துடன் கொல்ப் மைதானம், குதிரைப்பந்தய திடல் போன்ற ஆடம்பர விளையாட்டு அபிவிருத்தித் திட்டங்களையும் சீனா தடை செய்துள்ளது.

## சீனி ஊழல் விவகாரம் அமைச்சரும் தொடர்பு

### எதிர்க்கட்சியினர் கூச்சல்

(டில்லி)

சீனி ஊழலில் மத்திய உணவுத்துறை அமைச்சருக்கு பங்குள்ளதாக கூறி அவர் இராஜினாமாசெய்யவேண்டும் எனக் கோரி நேற்றுஇந்திய பாராளுமன்றில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து கோஷம் எழுப்பினர்.

சீனி இறக்குமதி ஊழல் குறித்த கியான் பிரகாஷ் குழுவின் அறிக்கை சபையில் விவாதிக்கப்படவேண்டும் என எதிர்க்கட்சியினர் விடுத்த கோரிக்கையை ஆளும் கட்சியினர் எதிர்க்கவே சபையில் பெரும் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. இதனால் சபை நண்பகல்வரை சபாநாயகரால் ஒத்திவைக்கப்பட்டது,

அடிப்படை...

அற்றது என்ற கருத்துத் தவறானது. இவற்றில் கிருமிகளின் அளவு குறைவாக இருக்கின்ற போதிலும், குடிநீராக இவற்றைப் பாவிக்கும்போது கொதித்து ஆறிய பின் பேபருகவேண்டும்.

மழையைத் தொடர்ந்து நுளம்பின் பெருக்கத்தினால் மலேரியாவின் தாக்கம் அதிகரித்துள்ளது. எனவே இதனைக் கட்டுப்படுத்த உங்கள் வளவுகளிலும் அதனைச் சுற்றவும் உள்ள நீர் தேங்கி நிற்கும் சிறு பள்ளங்களை மூடியும், சிரட்டைகள், திறந்த ரின்கள், பழைய டயர்கள் முதலியவற்றைப் புதைத்தும் குடம்பிகள் தேங்கியுள்ள நீர் நிலைகளில் வாகனக் கழிவு எண்ணையை ஊற்றி எண்ணைப்படலம் ஒன்றை ஏற்படுத்தியும், பாவனையிலுள்ள குளங்களில் குடம்பியை உண்ணும் நன்னீர் மீன்களான யப்பான் மீன் முதலியவற்றை வளர்த்தும் பங்களிப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், நுளம்பின் தாக்கத்தைக் குறைப்பதற்குப் புகையிடுதல் நுளம்புவலை, நுளம்புத்திரி, புல்லெண்ணை முதலியவற்றை உபயோகிக்கும்படியும், வீடுகளிலும் நுளம்புகள் உட்புகக்கூடிய பாதைகளை மாலையிலேயே அடைத்துவைக்கும்படியும் சகல மக்களையும் தமிழீழ சுகாதார சேவைகள் பகுதியினர் கேட்டுக்கொள்கின்றனர்.

**1994-12-20**

**செவ்வாய் இரவு**

08.01 - ஊர்சுற்றும் ஒலிவாங்கி

08.10 - அறிந்துகொள்ளுங்கள்- தகவற் களஞ்சியம்.

08.20 - நலந்தானா - ''தாய்ப்பால் ஊட்டுவது தாயின் தலையாய கடமை'' வழங்குபவர் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள்.

08.30 - செய்திகள்

08 40 - கருத்துக்களம்-இ. இராஜேஸ்வரன் எழுதிய ''மறதி''

08.50 - களமும் கானமும் -அச்சுநகர் பானுஷாந்தன் எழுதிய ''உம் பெயர் என்றும் மண்ணிலும் மனதிலும்''

09.00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**1994-12-21**

**புதன் காலை**

07.02 - மாவீரவணக்கம்

07.15 - நீங்கள் கேட்டவை

07.30 - செய்திகள்

07.35 - பத்திரிகைச் செய்திகள்

07.40- நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

08.00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

[illegible] கப்பட்டிருப்பின் இவர்கள் [illegible] எனக் கூறப்படுகிறது.

## வலி.மேற்கு பகுதிகளில் சுகாதார பரிசோதனை

[தொல்புரம்]

ஈக்களால் ஏற்படும் நோய்களைத் தடுக்கும் முகமாக வலி மேற்குப் பகுதியில் உள்ள உணவகங்களில் திடீர் சுகாதாரப் பரிசோதனையை மேற்கொண்ட சுகாதாரப் பகுதியினர் அங்குள்ள சுகாதாரக் குறைபாடுகளை கண்டறிந்து கொண்டனர். சுகாதாரத்துடன் காணப்படாத உணவகங்களின் உரிமையாளர்களிடம் இதுபற்றிய சுகாதார அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

மேலும் அங்குள்ள உணவு விடுதிகளும், உணவைத் தயாரிக்கும் இடங்களும் பார்வையிடப்பட்டன. இந்த அவசிய நடவடிக்கைகளினால் தற்போது பெரும்பாலான உணவகங்களில் உணவுப் பாதுகாப்பு முறை திருப்திகரமாக தென்படுவதுடன், சுகாதாரமும் பேணப்படுகின்றதை அவதானிக்க முடிந்தது.

## சான்றிதழ் வழங்கல்

தொழில்நுட்ப ஆக்கத்திறன் போட்டியில் பங்குபற்றிய யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை ஆகியகல்விக்கோட்டங்களைச் சேர்ந்தோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர் வரும் வியாழன் காலை 9 மணிக்கு யாழ்/கனகரத்தினம் ம.ம. வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் கலைநிகழ்ச்சிகளும் வீடியோ படக்காட்சியும் நடைபெறவுள்ளது.

## கிறிஸ்து பிறப்பு விழா

கோப்பாய் வை, எம். சி.ஏ யினர் வழங்கும் ''சமாதான ஒளியை நோக்கி'' எனும் கிறிஸ்து பிறப்பு விழா நாளை மாலை 5 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் உரை, நாடகம், நடனம், பாடல்கள், கவிதை ஆகியனவும் இடம்பெறும்.

## சிறுவர் பூங்கா கலை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இயங்கும் சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்காவின் மாதாந்த கலைநிகழ்வும் கூட்டமும் சென்ற வியாழன் இரவு பூங்கா அரங்கில் நடைபெற்றது.

பூங்கா நிர்வாகி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தீவகக்கோட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் ஆசிரியர் திரு. சொக்கலிங்கம் ஆகியோரின் சிறப்புரைகளுடன் பூங்கா சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (22)

## பயிற்சிப் பாசறை

யாழ் மாவட்ட மக்கள் நலன் புரிச் சங்கத்தால் அமைக்கப்பட்ட விசேட முதலுதவி படையணியின் இறுதியும் மூன்றாவதுமான பயிற்சிப் பாசறை இன்று காலை 9 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது இப்பாசறையில் ஒரு மாணவனுக்கு தற்போதைய சூழ்நிலையில் தேவையான சகல பயிற்சிகளும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மயிலந்தனைப் படுகொலை விசாரணை

## அனுராதபுரத்திலிருந்து கொழும்பிற்கு மாற்றம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மயிலந்தனையில் சிறிலங்கா இராணுவத்தினரால் 35 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான விசாரணை அனுராதபுரத்திலிருந்து கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளது.

மேற்படி தகவலை சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கில் லெப். ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ மற்றும் இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்ட தினத்திற்கு மறுதினம் இப்படுகொலைகள் மயிலந்தனையில் நடைபெற்றது.


## 28 பற்றறி எடுத்து வந்தவர் இராணுவத்தால் கைது

(கொழும்பு)

வடபகுதிக்கு இருபத்தி எட்டு கார் பற்றறிகளை மறைத்துக் கொண்டு வர முற்பட்ட சாரதியுடன்லொறியும் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது

அனுராதபுரம்புளியங்குளம் இராணுவமுகாமில்சோதனை இடப்பட்ட போது இப் பற்றறிகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இதன்சாரதி தமிழர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## மரண அறிவித்தல்



வைரமுத்து வாசுதேவன் (வாசு)

## க.பொ.த. உயர்தர பரீட்சை திருத்திய முடிவுகள் வந்து சேர்ந்தன

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தர பரீட்சையின் திருத்தப்பட்டமாவட்ட நிலைவிபரம் யாழ். 'கல்வித் திணைக்களம் வந்து சேர்ந்துள்ளது.

யாழ். மாவட்டப் பரீட்சார்த்திகளின்மாவட்ட நிலை விபரத்தில்தவறு ஏற்பட்டதாகவும்அவைதிருத்தப் படுவதாகவும் முன்னர் அறிவிக்கப்பட்டமை தெரிந்ததே.

தற்போது கணனி முறையில் திருத்தப்பட்டு சரியான முறையில் மாவட்ட நிலையில் தெரிவான மாணவர்களின் பெறுபேறுகள் வந்தன. (யோ)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையால்

## மூன்று அம்சக் கோரிக்கை மகஜர் யாழ். அரச அதிபரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுச் சபையினால் மூன்று கோரிக்கைகள் அடங்கிய மகஜர் நேற்று அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது

மாதாந்தம் ஆயிரம் மெற்றிக் தொன் பொருள்களைத் தருவிப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்களிற்கு நிரந்தரமாக கப்பல் வசதியை ஏற்படுத்தித்தருமாறு இம் மகஜரில் கோரப்பட்டுள்ளது

மேலும் கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினால் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களிற்கு ஏற்பட்ட அழிவுகள், சேதங்கள், நட்டங்களிற்கு சிறிலங்கா அரசிடம் இருந்து நட்டஈடு பெற்றுக் கொடுப்பதற்கும் மற்றும் புனரமைப்பு செய்யப்படுவதற்கும் ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது

கடந்த ஐப்பசிமாதம் உணவு மந்திரிக்கு கூட்டுறவுச் சபையினால் கூட்டுறவுச் சங்கங்களின் இடர்கள் தொடர்பாக அனுப்பிவைக்கப்பட்ட மகஜர்க்கு தொடர் நடவடிக்கை எடுத்து கூட்டுறவுச் சங்கங்களின் இடர்கள் தீர உதவுமாறு கோரியுள்ளனர்

இவ்வாறான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை நேற்று யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை அதிகாரிகள் செயலகத்தில் யாழ் மாவட்ட அரச அதிபரைச் சந்தித்து கையளித்தனர் (இ, பா)

### புனித தோமையார் விழா

மாதகல் புனித தோமையார் ஆலய விழா மாதகல் புனித தோமையார் ஆலய மக்களால் நாளை புதன் கிழமை மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெறும். திருவிழா திருப்பலி காலை 6.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

க. பொ. த. (உயர்தர) பரீட்சை

## தனிப்பட்ட பரீட்சார்த்திகள் முடிவுகள் விசேட தபாலில்

1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க பொ. த. உயர்தரப்பரீட்சை தனியார் பரீட்சார்த்திகளது பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்திலிருந்து கொழும்பில் தபாலில் இடப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளது பரீட்சைப் பெறுபேறுகள் விசேட தபால் சேவை மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

இப்பரீட்சைப் பெறுபேறுகள் விரைவில் வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது (யோ)

## பருத்தித்துறை இறங்குதுறைபகுதி உணவுத்திணைக்களத்தின் கீழ்வரும்

(வடமராட்சி)

தற்போது புனர்வாழ்வு திணைக்களத்தின் நடவடிக்கைகளில் இருந்து வரும் பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதி அடுத்த வருடம் முதல் உணவுத் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்படவுள்ளது.

இப் புதிய நடைமுறை அடுத்த வருடம் ஜனவரி முதல் நடைமுறைக்கு வருகிறது.

இப்புதியதிட்டத்திற்கமைய பருத்தித்துறை துறைமுகப் பகுதிக்கு பொறுப்பதிகாரியாக துறைமுக வெளிக்கள உத்தியோகத்தர் திரு. சு. பஞ்சாட்சரம் நியமிக்கப் படவிருப்பதாகவும் நம்பகமாக தெரிய வருகிறது(யோ

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

### முக்கிய அறிவித்தல்

### ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியாரின் 142-ம் ஜெயந்தி விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பி, ப 3. 30 மணிக்கு திருநெல்வேலி இராம கிருஷ்ணாலயத்தில் நடைபெறவுள்

## மேஜர் ரூபன் உருவப்படம் அல்லிப்பளையில் திறப்பு

(தென்மராட்சி)

பூநகரி தவளைத் தாக்குதலில் வீரச்சாவினை தழுவிக் கொண்ட மேஜர் ரூபன் (மட்டக்களப்பு) என்ற மாவீரருடைய முதலாம் வருடத்தினை முன்னிட்டு கடந்த 17ஆம் திகதி அல்லிப்பளை இறங்குதுறைப்பகுதியில் இவரது ஞாபகார்த்தமாக நினைவுருவப்படம் திரைநீக்கமும் படிப்பகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முதலில் ஈகச் சுடரினை பளை காவல் துறைப் பொறுப்பாளர் ஏற்றி வைக்க நினைவுருவப் படத்தினை மட்டு, அம்பாறை மாவட்ட தளபதியும் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியுமான திரு. கருணாஅம்மான் அவர்கள் திரை நீக்கம் செய்து வைத்தார். நினைவுருவப் படத்திற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் திரு. செம்பியன் (ரவி) அவர்கள் மலர்மாலை அணிவித்தார். இதனைத் தொடர்ந்து இம் மாவீரரின் ஞாபகார்த்தமாக புதிதாக அமைக்கப்பட்ட படிப்பகத்தினை தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. வெற்றிச் செல்வன் திறந்து வைத்தார். இதனைத்தொடர்ந்து இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் மூத்த தளபதிகருணா அம்மான் தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. வெற்றிச் செல்வன் உட்பட பலரும் உரைநிகழ்த்தினர் இந்நிகழ்வில் பெருமளவில் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

### ஆதாரம்காட்டி பெறவும்

புலோப்பளை பயணிகள் படகுச்சேவையில்18-12-1994 அன்று தங்கநகைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதன் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரம் காட்டி கந்தர்மடத்தில் அமைந்துள்ள யாழ் மாவட்ட வருவாய்ப்பகுதிச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறுவருவாய்ப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## ஈ.பி.டி.பி. - கடற்படை உறவில் முறுகல் நிலை

சிறிலங்கா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்குட்பட்டுள்ள தீவகப் பகுதியில் ஈ பி டி பி குழுவினருக்கும், சிறிலங்கா கடற்படையினருக்கும் இடையிலான உறவுகளில் முறுகல் நிலை காணப்படுவதாகவும், இது தொடர்பாக பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் நம்பகரமாகத் தெரியவருகிறது-

அண்மையில் பாராளுமன்ற கட்டடத்தில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரைச் சந்தித்த ஈ பி டி பி குழுவினர் இவ் விடயத்தை அமைச்சரிடம் கூறியதாகவும் தெரியவருகிறது-

## ஆசிரியர்பயிற்சிக்கலாசாலை வினாத்தாள்கள் வந்தன

(வடமராட்சி)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இறுதிப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் நேற்று யாழ் கல்வித் திணைக்களம்வந்துசேர்ந்தன-

இம் மாதம் 22-ம் திகதி நடைபெறவுள்ள பரீட்சைக்குரிய வினாத் தாள்களும் அதற்குரிய அனுமதி அட்டைகளும் வந்துள்ளன

பலாலிக்கு விமானம் மூலம் எடுத்து வரப்பட்ட இவ் வினாத்தாள்கள் 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்டு பின்னர் கல்வித்திணைக்களம் வந்துள்ளன- (யோ)

### விடைத்தாள்கள் எடுத்துசெல்லப்பட்டன

(வடமராட்சி)

யாழ் மாவட்டத்தில்

### லங்கா சீமெந்து சம்பளக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து ஊழியர்களுக்கான கார்த்திகை, மார்கழி மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் நாளை காலை 9மணி முதல் 2.30 மணிவரை யாழ். வர்த்தக வங்கியில் வழங்கப்பட

(தொழில் நுட்ப உத்தியோகத்தர்- கரம் நிறுவனம், கௌரவ பொருளாளர் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் சி. க. கூ. சங்கம்)

நீர்வேலி மேற்கு மாசுவனை பிறப்பிடமாகக் கொண்டவரும், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, வட்டுக் கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனும், முன்னாள் ஆய்வு நிறுவன புத்தூர் பிரதேச இணைப்பாளரும் ஆகிய செல்வன் வைரமுத்து வாசுதேவன் 19- 12- 94 நேற்று காலமானார்.

இவர் வைரமுத்து நாகரத்தினம் தம்பதிகளின் செல்வப் புத்திரனும், சேதுராசா (பாரின்), பலராமன், நாகேஸ்வரி, விஜயரங்கன், விஷ்ணு (டென்மார்க்), விஜயகுமார் (பாரின்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், லதா, குகநேசன் (ஈழநாதம் வன்னிப் பதிப்பு) ஆகியோரின் உடன் பிறவாத சகோதரனும், இந்திராணி, தவமலர், நாகேஸ்வரி, காராளசிங்கம் (பாரின்), கணநாதன் (பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

குணசிங்கம் கணநாதன்

மாசுவன்,
நீர்வேலி, மேற்கு,

(10452)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

## வைரமுத்து வாசுதேவன்

(தொழில் நுட்ப உத்தியோகத்தர்)

வைரமுத்து வாசுதேவன் அவர்கள் 19- 12 - 1994 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் கடமையுணர்வை நன்றிப் பெருக்குடன் நினைவு கூருகின்றோம். அவரின் ஆத்மா சாந்திஅடைய பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகிகள்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

கரம் நிறுவனம்
ஆனைக்கோட்டை
மானிப்பாய்.

(10453)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம், இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலிகாமப் பிரிவில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களின் உதவு தொகைகள் 20-12-94 இருந்து 23-12-94 வரை 19 செம்மணி வீதியில் இயங்கும் தனியார் கல்விப் பிரிவில் ஏற்கப்படும்.

தலைவர்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

(சி-10950)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லையா நாகமுத்து

சிறுவிளானைச் சேர்ந்த திருமதி செல்லையா நாகமுத்து அம்மையார் 19 - 12 - 94 திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற சிற்பாசாரியார் செல்லையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முருகேசு பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் புத்திரியும் காலஞ்சென்ற மனோன்மணி அவர்களின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியம் அவர்களின் மாமியாரும் யோகரா்ணியின் சிறிய தாயாரும் உதயகுமார் (சுவிஸ்), திருமதி பாலசுப்பிரமணியம், உதயநிர்மலா, உதயசித்திரா, உதயகுமாரி உதயசெல்வி, உதயசங்கர், உதயசாந்தி, உதயபாரதி, ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 20-12-94 செவ்வாய்க் கிழமை இன்று 12 மணியளவில் மல்லாகம் நீதிமன்ற வீதியிலுள்ள (V. C. லேன்) இல்லத்திலிருந்து மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:

கி. சுப்பிரமணியம் (ஆச்சாரி)
(மருமகன்)

சிறுவிளான்.

(10454)

ணாலயத்தில் நடைபெறவுள்ளது

### மேஜர்

தன, பிரிகேடியர் சமரதுங்க, பிரிகேடியர் டபிள்யூ. எம். பி. பெர்ணாண்டோ, பிரிகேடியர் ஜெயசுந்தர ஆகியோர் அடங்குகின்றனர்.

மேலும், கேணல் சி. எஸ். எஸ். ரணதுங்கா, கேணல் ஜே பி. ஜெயவர்த்தன, கேணல் டி. எஸ். கே. விஜயசூரிய, கேணல் டபிள்யூ ஏ. சி. ரி. கே குணசேகரா, கேணல் மதநாயக்க, கேணல் பி. எஸ். பி. குலதுங்க, கேணல்ரோஹன், கேணல்கொடவெல, கேணல் எஸ். பி. தென்னக்கோன், கேணல் ரணவீர, கேணல் விசாதுமுதுவ ஆகியோர் தற்காலிக பிரிகேடியர்களாக பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.

இந்தப் பதவியுயர்வுகள் டிசம்பர் முதலாந் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது.

### பேச்சுவார்த்தை

குழு ஆனையிறவுப் பாதையைத் திறப்பது பற்றியே புலிகளிடம் சிபார்சு செய்யுமெனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஆனையிறவுப் பாதையைத் திறக்க புலிகள் ஒப்புக்கொண்டால் இராணுவ நடவடிக்கைகள் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட மாட்டாதுஎன உறுதியளிக்கப்படும் எனவும்,

யாழ். செல்லும் அரசாங்க தரப்புக் குழுவில் ஒரு சிரேஷ்ட இராணுவ அதிகாரியும் கலந்து கொள்ளவுள்ளார் எனவும்,

இவர் அரசதரப்புக் குழுவுக்கு யுத்தநிறுத்தம் மேற்கொள்வது பற்றியும், பொது மக்களுக்கான போக்குவரத்துப் பாதை திறப்பது பற்றியும் திட்டங்களை வரைய ஆலோசனை வழங்குவார் எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது

(வடமராட்சி)

யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்கள் கொழும்பு பரீட்சை திணைக்களத்திற்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

டிசம்பர் மாதம் நடைபெற்ற பரீட்சைவிடைத்தாள்கள் திருத்தத்திற்காக நேற்று 'கோமாரி' கப்பல் மூலம் எடுத்துச் செல்லப்பட்டன

(யோ) (17)

## ஜனவரி 7இல் போட்டிப் பரீட்சை

(வடமராட்சி)

எழுது வினைஞர்களுக்கான போட்டிப் பரீட்சை ஜனவரி ஏழாம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

திணைக்களங்களில் ஏற்பட்டுவரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இப்போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது,

இப்போட்டிப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் ஜனவரி முதல் வாரத்தில் வந்து சேரும்

(யோ)

### அரசாங்க

மாவட்டத்தில் நடவடிக்கைப் பொறுப்பதிகாரியாக இருந்து தற்போது நடவடிக்கைப் பணியகத்தில் நிறைவேற்றுப் பணிப்பாளராக பொறுப்பேற்றிருக்கும் பிரிகேடியர் ஒருவரே இவ்வாறு பேச்சுக்களில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை ஜனவரி 22-ம் திகதி பாப்பாண்டவரின் விஜயத்திற்கு முன்னர் யுத்த நிறுத்தம் ஏற்படுமா? என நவீன் குணரட்ணாவிடம் கேட்ட போது இது குறித்து தெளிவான கருத்தெதையும் கூறமுடியாது என்றார்

நத்தார் தினத்திற்கு முன்னர் ஒருகட்டப் பேச்சு நடக்கும் எனவும் இது ஒரு நாள் மட்டுமே நடைபெறும் என்றும் அவர் கூறினார்

தக வங்கியில் வழங்கப்படவுள்ளதாக நிதிக் கணக்காளர் தெரிவித்துள்ளார்.

இவர்களுடன் லங்கா சீமெந்து துறைமுக ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளும் அதே தினத்தில் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## செப்ரிசீமியாவால் சிறுமி பலி

(வடமராட்சி)

செப்ரிசீமியா காய்ச்சலுக்கு சிறுமி ஒருவர் பலியானார், காய்ச்சல் ஏற்பட்டு மூன்று நாட்களுக்குள் இவர் பலியானார்.

மாதகலில் இருந்து இடம் பெயர்ந்து கரவெட்டிப் பகுதியில் தங்கிவரும் அருந்தவராசா பகீரதி (12 வயது) என்ற சிறுமியே கடந்த சனிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் பலியானார்.

(யோ)

### சிறிமா

ர்ந்தே செய்தியாளர்கள் அங்கு கூடினர்.

யாழ்ப்பாணம் செல்லவுள்ள அரச தரப்பு குழுவினர் தொடர்பான விபரம் அறியவும் பேச்சு வார்த்தை நடைபெறவுள்ள திகதி பற்றிஅறியவும் பேச்சு வார்த்தையில் இடம்பெறவுள்ள விடயங்கள் தொடர்பாக அறியவுமே செய்தியாளர் பிரதமர் சிறிமாவோ வீட்டில் கூடியிருந்தனர்

### யாழ்.

ஆளுநராக இவர் இருந்த போது பல மில்லியன் ரூபா மோசடி இடம்பெற்றுள்ளதென்றும் இதுகுறித்து ஆராயுமாறு வடக்கின் ஆசிரியர் சங்கமொன்று ஜனாதிபதி சந்திரிகாவைக் கோரவுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.